பக்கங்கள்:- பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா. 6.00

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 31 | சனிக்கிழமை (14.06.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 177

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

# யுத்த நிறுத்த மீறல்களில் கண்காணிப்புக் குழுவே தீர்ப்பு அளிக்க வேண்டும்

## சு.ப. தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(நமது நிருபர்)


**இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அதனை நடைமுறைப்படுத்தும் போது இரு தரப்பினராலும் ஏற்படக்கூடிய யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான விடயங்களில் கண்காணிப்புக் குழு தலையிட்டு அதற்குரிய தீர்ப்பு வழங்கும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர், றிட்ஜவே ரெலக்சன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.

பெற்றது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இச் சந்திப்பில் இலங்கைப் பொலிசாராலும், இராணுவத்தினராலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.

தேசங்களில் இடம்பெற்றுவரும் கொலைகள், கொள்ளைகள், உறுப்பினர்கள் கடத்தப்படுவது தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுத் தலை

(10ம் பக்கம் பார்க்க)





கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்த காட்சி.

நடைமுறைப்படுத்தும் போது இரு தரப்பினராலும் ஏற்படக்கூடிய யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான விடயங்களில் கண்காணிப்புக் குழு தலையிட்டு அதற்குரிய தீர்ப்பு வழங்கும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் றிட்ஜவே ரெலக்சன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இச் சந்திப்பில் இலங்கைப் பொலிசாராலும், இராணுவத்தினராலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சு.ப. தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் கொலைகள், கொள்ளைகள், உறுப்பினர்கள் கடத்தப்படுவது தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுத் தலை

(10ம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்த காட்சி.

# சமாதானப் பேச்சுக்களை புலிகள் மீண்டும் தொடரவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

டோக்கியோவில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றாததினால் நல்லதொரு அரிய வாய்ப்பை விடுதலைப்புலிகள் இழந்து விட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்புதாவது:

இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் மீண்டும் ஈடுபடவேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது வன்முறைகளை உளப்பூர்வமாக கைவிட்டால் மட்டுமே சட்டரீதியான அரசியல் சக்தியாக அவர்களை அங்கீகரிக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் அமைக்கப்படக்கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து இலங்கை அரசு தெளிவான வரைபு ஒன்றை வெளியிடாதவரை பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளமையையும் அமெரிக்கா அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

(ம)

# பொங்குதமிழ் எழுச்சிக்காக யாழ். குடா விழாக்கோலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ''மாபெரும் பொங்கு தமிழ்'' எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

யாழ். குடாநாடு தழுவிய வகையில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை ஒட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு ஒலி பெருக்கிகள் மூலம் பொங்குதமிழ் பாடல்கள் இசைக்கவிடப்பட்டுள்ளன.

பொங்கு தமிழ் நிகழ்வுக்காக குடாநாடே எழுச்சிக் கோலம் பூண்டுள்ள அதேநேரம் குடாநாட்டு மக்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம்

# படையினரை உசார்நிலையில் இருக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் எந்த நேரத்திலும் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராகி வருவதால் பாதுகாப்பு படையினரை உசார் நிலையில் வைத்திருக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா படைத் தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரசின் மீது அதிருப்தி கொண்டிருக்கின்ற விடுதலைப்புலிகள் தமது படைப் பலத்தை பெருக்கி திடீர் தாக்குதலை தொடுக்க திட்டமிட்டிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்துவதால் அதனை முறியடிக்கத்தக்க வகையில் பாதுகாப்பு படையினரை முழு உசார் நிலையில் வைத்திருக்குமாறு ஜனாதிபதி தளபதிகளை பணித்துள்ளார்.

நாட்டின் தலைவி என்ற வகையில் நாட்டைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை தான் எடுப்பதற்கு பின்நிற்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(இ)

# அமைச்சர் பீரிஸ் இன்று வாஜ்பாயுடன் சந்திப்பு

(நமது நிருபர்)

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இன்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயை சந்தித்துப் பேசவுள்ளார்.

டோக்கியோவில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை முடித்துக் கொண்டு ஜப்பானில் இருந்து நேற்று இந்தியா சென்ற அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வத்சிங்கா மற்றும் எதிர்க் கட்சித் தலைவியும் காங்கிரஸ் கட்சித் தலைவியுமான சோனியா காந்தி ஆகியோரையும் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் டோக்கியோ மாநாட்டு முடிவுகள் குறித்தும் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற நிதியுதவிகள் தொடர்பாகவும் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.

(ம)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

### அரசும் – புலிகளும் கோரினால் மட்டுமே

# காணாமல் போனோரைக் கண்டுபிடிக்க ஐ.சி.ஆர்.சி பங்களிக்க முடியும்

## தலைமைப் பேராளர் செல்வி பிலிபா

(மட்டக்களப்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து காணாமல் போனோரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய தொழில் நுட்பம், ஐ.சி.ஆர்.சியின் பணிகள் என்பன குறித்து விளக்கமளிக்கும் கலந்துரையாடல் அண்மையில் மட்டக்களப்பு ஐ.சி.ஆர்.சியின்பிராந்திய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற போது, பிராந்தியத் தலைமைப் பேராளர் செல்வி பிலிபா நேட்டோ மார்க்கஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற 5வது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, போரினால் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின உதவி கோரப்பட்டது.

அதன் பின்னர் இருதரப்பினருடனும் தனித்தனியாக இவை தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போதும் இது தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை.

ஐ.சி.ஆர்.சி ஏற்கனவே பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

முறைப்பாடு செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பி விட்டார்களா என்ற விடயத்தை உரியவர்களிடம் பெற்று வருகிறோம்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரும் காணாமால் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்று குறிப்பிட்டார்.

(உ)

## மெய்வல்லுநர் போட்டி

(தம்பசிட்டி)

துன்னாலை காசிநாதர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு பாடசாலை அதிபர் நா.பரமானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி கஜேந்திரகுமாரும், கௌரவ விருந்தினராக வடமராட்சி கட்டடப் பரிசோதகர் இ. ரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விக்கழகப் பொறுபபாளர் தாயகனும் கலந்துகெள்ளவுள்ளனர். (தி - 45)



உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! கண்காட்சியில் கலந்து கொண்ட சுவாமி சித்ரூபானந்தாவுடன் இளைப்பாறிய சுகாதாரசேவைகள் அத்தியட்சகர் எஸ்.மாணிக்கம் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: பரு.நிருபர்)

# ஸ்ரீ.சு.க.பிரதித் தலைவராகும் வாய்ப்பு மகிந்த ராஜபக்ஷவுக்கு

### அனுராவின் ஆதரவாளர்களால் அதற்குஆபத்து?



(கொழும்பு)

இம்மாதம் 22ஆம்திகதி நித்தம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14வது ஆண்டு மாநாட்டில் கட்சிக்கு ஒரு பிரதித்தலைவரை தெரிவுசெய்யும் விவகாரம் பெரும் சர்ச்சையைக்கிளப்பும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பதவிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அனுரா பண்டாரநாயக்கவுக்கும் இடையில் கடும் போட்டியிருக்கும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

அண்மையில் கட்சியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றின் படி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு 61 சதவீத ஆதரவும் அனுரா பண்டாரநாயக்காவுக்கு 19சதவீத ஆதரவும் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரித்துள்ளன.

ஆண்டு மாநாட்டில் கட்சிக்கு ஒரு ஊடகப் பேச்சாளர், செயற்குழு, நியமனக் குழு என்பனவும் தெரிவு செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதிக்கிருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி மாற்று அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஏதுவாக,ஜே.வி.பி.யுடன் வைத்துக் கொள்ளவிருக்கும் கூட்டை அங்கீகரிக்கும்தீர்மானம் ஒன்றும், அபிவிருத்திலொத்தர் சபையை பொறுப்பேற்றதை வரவேற்கும் தீர்மானமொன்றும் இதில் நிறைவேற்றப்படவுள்ளது.

அரசியல்யாப்பு குழுவோ, அரசமைப்புத் திருத்தங்களுக்கான குழுவோ,கொள்கை வகுப்பு குழுவோ அமைப்பது தொடர்பாக எந்தவொரு தீர்மானமும் இதில் எடுக்கப்படவிருப்பதாக தெரியவரவில்லை. (உ)









யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி அழகெழல் நுண்கலைமன்றம் நடாததிய சிறுவர் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற உம்மாண்டி விளையாட்டு நாடகத்தில் பங்கேற்ற அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவர்களையும், நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காண்கிறீர்கள். (படங்கள் ச.சசீந்திரன்)

## வித்துவான் வேலனுக்கு கம்பன்கழகத்தில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தலைசிறந்த தமிழறிஞரும், சிறந்த பேச்சாளரும், முன்னாள், ஆசிரியருமான வித்துவான் வேலன் அண்மையில் லண்டனில் காலமானதையொட்டி அஞ்சலி நிகழ்வொன்றை அகில இலங்கைக் கம்பன்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி அஞ்சலிக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30மணிக்கு நல்லூர், கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் பிரதிஅதிபர் க.சிவராமலிங்கம், கலாநிதி திருமதி மனோனமணி சண்முகதாஸ், ஆசிரியர் ஆறு. திருமுருகன், கம்பவாரி. இ.ஜெயராஜ் ஆகியோர் அஞ்சலியுரையாற்றவுள்ளனர். (த)


உங்கள் வலம்புரியில் மிகவிரைவில் எதிர்பாருங்கள்!

வாசகர்களின் கருத்து மோதலுக்கு களம் அமைக்கும்

விவாத அரங்கு

விடயம்: யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு பெரிதும் காரணமாக விளங்குவது


ஆசிரியர்களின் அசமந்தம் | பெற்றோர்களின் அக்கறையீனம் | பொருத்தமற்ற கல்வித்திட்டம்

நீங்கள் ஆதரிக்கும் விடயத்திற்குச் சார்பான கருத்துக்களை எழுதி

"விவாத அரங்கு"
வலம்புரி,
இல:15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு எதிர்வரும் 20.06.2003க்கு முன்னதாக அனுப்பி வையுங்கள்.

கருத்தாழமும், சுவாரஸ்யமும் மிக்க விவாத அரங்கில் எழுத, வாசிக்கத் தவறாதீர்கள்!

மீசாலை நகுலன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் மு.சிவானந்தம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: அ.கிருஷ்ணமூர்த்தி)

# அடிமைத்தனத்திற்கு துணைபோகும் நாடுகள் மீது அமெரிக்கா அதிருப்தி

(வாஷிங்டன்)

அடிமை வேலைகளுக்கும் தீய நடவடிக்கைகளுக்கும் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்துச் செல்லும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முன்வரவில்லை என்று சில நாடுகள் மீது அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றம் சாட்டியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் அறிக்கையொன்றினையும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது,

சிறுவர்களை அடிமைவேலைகளில் ஈடுபடுத்திவந்த கம்போடியா, ரஷ்யா, ஐக்கிய அரபு இராட்சியம் போன்ற நாடுகள் இந்த நடவடிக்கைகளை குறைத்துள்ள போதிலும் கிறீஸ், துருக்கி போன்ற நாடுகளில் இவ்வாறான செயல்கள் இன்னும் குறையவில்லை.

வருடாந்தம் 8 லட்சம் முதல் 9 லட்சம் வரையிலான மக்கள் உலகளாவிய ரீதியில் சட்டவிரோத செயல்களுக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அதுமட்டுமன்றி இவர்கள் வேற்று நாடுகளில் அடிமைத்தனமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-9)

# பின்லேடனைப் பின்பற்ற விரும்பிய மாணவன் கைது

(வாஷிங்டன்)

சர்வதேசப் பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனைப் போன்று மாற விரும்பிய மாணவன் ஒருவன் அமெரிக்க பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

ஒஸாமா பின்லேடனின் செய்திகளை அதிகமாக விரும்பிப் படித்து அவரது செயற்பாடுகளைப் போற்றிவந்த அமெரிக்காவின் சியாட்டில் நகரைச் சேர்ந்த பால்ரேவக் என்ற இந்த மாணவன் தானும் அதேபோன்ற நாச வேலைகளில் ஈடுபட்டு உலகப் புகழ் பெறவேண்டும் என்று எண்ணி இதுபற்றித் தனது சக நண்பன் ஒருவரிடம் மனம் விட்டு பேசியுள்ளான்.

அத்துடன் இருவரும் சேர்ந்து அமெரிக்காவின் கடலோரக் காவல் படையின் நிலையமொன்றையும் இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கையும் வெடி வைத்துத் தகர்க்கலாம் என்று தனது நண்பனை அழைத்துள்ளான்.

தனது நடவடிக்கைகளின் ஆரம்பக் கட்டமாக வெடி மருந்துகளை வாங்கிக் குவிக்கவும் பால்ரேவக் ஆரம்பித்திருந்தான்.


இதனையடுத்து பால்ரேவக்கை நல்ல வழியில் திருப்ப முயற்சி செய்த அவனது நண்பன் தனது முயற்சி பலிக்காததை அடுத்து அமெரிக்கப் பொலிஸ் அதிகாரிகளிடம் தனது நண்பனின் நடவடிக்கைகள் குறித்து தெரிவித்துள்ளான்.

பால்ரேவக்கைப் பற்றி அறிந்த பொலிஸ் அதிகாரிகள் அவனைக் கைது செய்துள்ளதுடன் அவனது கல்லூரி விடுதிகளில் இருந்து முகத்துக்கு பூசிக்கொள்ளும் சாயப்பூச்சுக்கள், 2 சோடி கறுப்புக் கையுறைகள், தொப்பிகள், கறுப்பு நிற முகமூடிகள் மற்றும் வாக்கி-டோக்கி என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர். (உ-2)

# அமைச்சர் கொலின்பவல் பங்களாதேஷ் பயணமாகிறார்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை பங்களாதேஷிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.



இந்த விஜயத்தின்போது இவர் பங்களாதேஷின் தலைவர்களுடன் இருநாடுகளினது நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, பங்களாதேஷ் விஜயத்திற்கு முன்னதாக கம்போடியா விற்கான விஜயமொன்றையும் இவர் மேற்கொள்ளக்கூடும் என அமெரிக்க வெள்ளை மாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-2)

# கண்ணிவெடியில் சிக்கி இரு படையினர் உயிரிழப்பு

(புதுடில்லி)

காஷ்மீரில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

சிறீநகரில் இருந்து தென்புறமாக அமைந்திருந்த பென்கம் கிராமம் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை.

எனினும் இத்தாக்குதல் தனிநாடு கோரிப் போராட்டம் நடத்தும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கையாக இருக்கலாமென காஷ்மீர் பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (உ-2)

# முறையற்ற செயல்களில் ஈடுபடுகிறதாம் தமிழர் விடுதலை இயக்கத்திற்கு தமிழக அரசு தடைவிதிப்பு

(புதுடில்லி)

தமிழகத்தில் இயங்கிவந்த தமிழர் விடுதலை இயக்கத்திற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது.

சு.ப.இளவரசன் என்பவரது தலைமையில் இயங்கிவரும் இந்த அமைப்பு வழிபறி, கொள்ளை, கொலை மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனாலேயே தடை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இத்தடைக்கு எதிராக முறையீடு செய்வதற்காக இந்த அமைப்பிற்கு 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தமிழக அரசின் இந்தத் திடீர் தடை விதிப்புக் குறித்து சம்பந்தப்பட்ட அமைப்பு இதுவரை எந்தக் கருத்தினையும் வெளியிடவில்லை.

இதேவேளை, தமிழகத்தில் இயங்கிவந்த தமிழர் தேசிய இயக்கம், தமிழ் நாடுவிடுதலைப் படை, தமிழர் மீட்சிப்படை ஆகிய அமைப்புகளுக்கு தமிழக அரசு ஏற்கனவே தடை விதித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# தாக்குதல்கள் மாறி மாறித் தொடர்கின்றன மத்திய கிழக்கு சமாதானம் குறித்து சர்வதேச நாடுகள் சந்தேகம்

(நியுயோர்க்)

மத்திய கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள் அப்பிராந்தியத்தின் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என சர்வதேச நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலியப்படையினரும், ஹமாஸ் அமைப்பினரும் மாறி மாறி மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மத்திய கிழக்கில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் இஸ்ரேல் ஜெருசலேம் நகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் ஹமாஸ் அமைப்பின் தீவிரவாதிகளை முற்றாக அழிப்பதற்கு இஸ்ரேலியப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய வானொலி அறிவித்துள்ளது.

பலஸ்தீனத் தரப்பினால் இந்தத் தீவிரவாதத்தினைக் கட்டுப்படுத்த முடியாது விட்டால் அதனை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தங்களது கடமை என்று இஸ்ரேலிய அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# ஐ.நா.ஆயுதப் பரிசோதனைக் குழுத்தலைவர் ஓய்வு பெறுகிறார்

## அவரின் இடத்திற்கு டிமிட்ரி

(நியுயோர்க்)

ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவின் துணைத் தலைவர் டிமிட்ரி பெர்ரிகோஸ் அதன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளாக ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவின் தலைவராகப் பணியாற்றிவந்த ஹான்ஸ் பிளிக்ஸ் ஓய்வு பெறுவதையடுத்தே ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் டிமிட்ரி பெர்ரிகோஸைப் புதிய தலைவராக நியமித்துள்ளார்.

புதிய தலைவராக டிமிட்ரி பெர்ரிகோஸ் தெரிவு செய்யப்பட்டதற்குப் பாராட்டுத் தெரிவித்த ஹான்ஸ் பிளிக்ஸ் ஆயுத சோதனைப் பணியில் இவரைப் போல வேறு எவரும் செயற்பட்டதில்லை என்றும் கொரியா, தென்னாபிரிக்கா உட்பட பல நாடுகளிலும் ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட்ட சிறந்த அனுபவம் அவருக்கு இருப்பதாகவும் கூறியுள்ளார். (உ-2)

# மியான்மர் எதிர்க்கட்சித் தலைவியின் விடுதலையை விரைவுபடுத்துக! கம்போடியாவுக்கு வலியுறுத்து

(வாஷிங்டன்)

மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி ஆங்ஷான்சூகியின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்குமாறு கம்போடியாவை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

கம்போடியாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பிராந்திய நிறுவனங்களின் வருடாந்த மாநாட்டில் இவ்விடயம் குறித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் வலியுறுத்தப் போவதாகக் கூறியுள்ளார். ஜனநாயகத்திற்கு எதிரான மியான்மர் இராணுவ ஆட்சியாளர்களின் நடவடிக்கையினை ஆதரிக்க முடியாது எனவும் கொலின்பவல் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக பிராந்திய நிறுவனங்களின் மாநாட்டில் பேசுவதற்கு அந்த நிறுவனங்கள் மறுப்பு தெரிவிக்கலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-2)

# நடிகர் ராஜ்குமாரிடம் பொலிசார் விசாரணை

(புதுடில்லி)

சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட கர்நாடக நடிகர் ராஜ்குமாரிடம் தமிழகப் பொலிசார் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள வீடொன்றிலிருந்து நடிகர் ராஜ்குமார் 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம திகதி கடத்தப்பட்டார்.

106 நாட்களுக்குப் பின்னர் நக்கீரன் கோபால் மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோரின் முயற்சியினால் வீரப்பனின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனினும் இவரை விடுவிப்பதற்கு வீரப்பனுக்கு இந்திய நாணயப் பெறுமதியில் 30 கோடி ரூபா கப்பமாகக் கட்டப்பட்டதாக கிடைத்த தகவலை அடுத்தே ராஜ்குமார் மீதான விசாரணை இடம்பெற்றுள்ளது.

இந்த விசாரணைகள் தொடர்பாக எந்தவொரு தகவலையும் தமிழகப் பொலிசார் வெளியிடவில்லை. (உ-2)

WORLD NEWS உலக தரிசனம்

# போர் நிறுத்தம்

(மணிலா)


பிலிப்பைன்ஸ் முஸ்லிம் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் முதல் போர் நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

மலேசியாவின் வேண்டுகோளுக்கு இணங்க பத்து நாட்களுக்கு போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க உத்தேசித்துள்ளதாக மணிலாவில் உள்ள மேற்படி முஸ்லிம் தீவிரவாத இயக்கத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர். முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்த மலேசிய அரசு பல தடவைகள் முயன்ற போதும் அவை பயனளிக்காமல் போயிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)



வெப்பத்தின் கொடுமையைத் தாங்கமுடியாது கொல்கொத்தாவில் மாசுபட்டிருக்கும் ஹூக்ளி ஆற்றில் குளிக்கும் குட்டீஸ்கள்

ஜெர்மனியில் ஸ்கார்ஷ் பெர்க் நகரில் கடந்த புதன்கிழமை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான ரயில்கள். இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.



## இன்று ஒரு தகவல்

# நான் யார் தெரியுமா?

"நான் யார் தெரியுமா?" என்று கம்பீரமாகக் கேட்கின்றவர்கள் பலர் நமது ஊரில் இருக்கின்றார்கள். அதைநீங்களேதான் கொஞ்சம் சொல்லுங்கள் என்றுகேட்டால், "அதை ஏன் என்னிடம் கேட்கிறாய்? ஊரில் நாலுபேரைக்கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிடுவார். அந்தளவுக்கு அவர் தன்னைப்பற்றி தெரிந்துவைத்திருக்கிறார்.

ஒருஞானி மனிதனைப்பார்த்து, "நான், நான் என்று அடிக்கடி சொல்கிறாயே! அந்த நான்எங்கே இருக்கிறது?" என்றுகேட்கிறார். குழந்தையாய் இருந்தாயே அதுநீயா? சிறுவனாக வளர்ந்தாயே அது நீயா? அப்புறம் வாலிபனாக ஆனாயே அது நீயா? இதில் எதுநீ? எனறு கேட்டுவிட்டு, "நான் என்பது ஒரு மனக்கொள்கையே தவிர அதற்குவடிவம்ஏதும்இல்லை" என்கிறார் அந்த ஞானி.

ஒருஅரசன் வெகுகாலம் சந்தோஷமாக வாழவேண்டுமென்று ஆசைப்பட்டான். அதற்கு என்னவழி என்று எல்லோரையும் கேட்டான். அகந்தையில்லாதவன் நீடூழிவாழ்வான் என்று ஒருவர் சொன்னார். உடனே அப்படி வாழவேண்டும் என்கிற முடிவுக்கு அந்த அரசன் வந்துவிட்டான். யோசித்துப் பார்த்தான். பணம், படாடோபம் இரண்டும் அதிகரிக்கின்றபொழுதுதான்அகந்தை அதிகரிக்கிறது. அதனால்அகந்தைஇல்லாமல் இருக்கவேண்டுமென்றால், எளிமையாக வாழவேண்டும் என்று தீர்மானம் பண்ணினான். உடனே ஆடம்பரமான உடைகளையெல்லாம் விட்டுவிட்டு பழைய ஆடையை எடுத்து அணிந்து கொண்டான். அரண்மனையை விட்டு விட்டுப்போய் ஒரு குடிசையில் இருந்துவிட்டான்.

"யாரும் என்னைப் பார்த்து வணங்கக்கூடாது" என்று உத்தரவுவேறே போட்டுவிட்டான். கொஞ்ச நாட்கள் ஆனதன் பின்னர், அவன் தன்னைப்பற்றி நினைத்துப் பார்த்தான். "ஆகா என்னைப்போன்று எளிமையாகவாழ்கிறவர்கள் இந்த உலகத்திலே கிடையாது" என்கின்ற நினைப்புவந்தது. அந்த நினைப்பே ஓர் அகந்தையாக அவன் உள்ளே குந்தியிருப்பதை அதன்பின்னர்தான் புரிந்துகொண்டான். இதைப் பற்றி ஒரு ஞானியிடம் சொன்னான். அதற்கு அவர், "இதோபார் மன்னா! நீ அரசனைப்போல் உடை உடுத்திக்கொள்! அரசனைப் போலவாழ்! அரசன் என்கிற மரியாதையை மக்கள் உனக்குக் கொடுக்கட்டும். ஆனால், உன்மனதிற்குள்ளே நீ எளிமையாக இரு! என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார். அதன்பின்புதான் எளிமை என்றால் என்ன என்பதை அந்த அரசன் புரிந்து கொண்டான்.

"ஷ்மெல்னோ" என்னும்பெயர் கொண்ட ஒரு யூதகுரு இருந்தார். அவர் ஒருபுது ஊருக்குவந்தார். அந்த ஊர்ச்சனங்கள் எல்லோரும் ஓர் இடத்தில் கூடி, நமது ஊருக்குப் புதிதாக ஒரு குரு வந்திருக்கிறார். என்ன செய்யலாம் என்று ஆலோசனை பண்ணினார்கள். "இன்று மாலை நமது ஊர்மக்கள் சார்பில் அவருக்கு ஒரு பெரிய வரவேற்புக்கொடுக்க வேண்டும் என்று முடிவு பண்ணிவிட்டார்கள்". வரவேற்புவிழாவில் நீங்கள் வந்து கலந்துகொள்ளவேண்டும் என்று அந்தக் குருவிடம் காலையிலே போய்க்கேட்டுக் கொண்டார்கள். அவரும் சரியென்று ஒத்துக்கொண்டார். வந்தவர்கள் போய்விட்டார்கள்.

அதன்பின்னர் அந்தக்குரு என்னபண்ணினார்தெரியுமா? தன்னுடைய தனி அறைக்குள்போய் கதவைச் சாத்திக் கொண்டார். எதையோ திருப்பிச் சொல்லிச் சொல்லிக் கொண்டே அந்த அறைக்குள் குறுக்கும், நெடுக்கும் நடந்துகொண்டே இருந்தார். அவர் சொன்ன வார்த்தைகளில் ஒன்று இரண்டு வெளியில் இருந்தவர்கள் காதிலும் விழுந்தன.

கொஞ்சநேரம் கழித்து அந்த மதகுரு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். வெளியே நின்றுகொண்டிருந்த மக்கள் எல்லோரும் அவரைப் பார்த்து, "என்ன குருவே! அந்த அறைக்குள்ளே எதையோ திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே! அதனுடைய அர்த்தம் என்னவென்று நாங்கள் தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? வேறு ஒன்றுமில்லை! இன்று மாலை நடக்கப்போகின்ற விழாவில் நீங்கள் எல்லோரும் என்னை இந்திரனே - சந்திரனே என்றெல்லாம் புகழப்போகிறீர்கள். அந்தவார்த்தைகளைக் கேட்கிறபொழுது எனக்கு அகந்தை அதிகமாகிவிடும். அதனால் அந்த வார்த்தைகளை நானே திரும்பத்திரும்பச் சொல்லிப்பார்த்துக் கொண்டேன். இப்பொழுது அந்தவார்த்தைகள் எனக்குப் பழகிப்போய்விட்டன. புளித்துப்போயிற்று! இனிமேல் மாலையில் நீங்கள் எவ்வளவு தூரம் அதைச்சொன்னாலும் எனக்கு அகந்தை வராது" என்றார்.

ஆதலால் - இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், அகந்தைக்கு எப்போதும் இடம்கொடுக்காமல் இருப்பதற்கு பழகிக்கொள்ள வேண்டும். நான் என்கின்ற எண்ணம் இருக்கவே கூடாது.

"என்னை ஒருவராலும் அசைக்க முடியாது" என்று அடித்துச் சொல்லிக்கொண்டிருந்தார் ஒருவர். ஒருநாள் திடீரென்று அவர் எலும்புமுறிவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். என்ன ஆனது அவருக்கு என்று விசாரித்தார்கள். "என்னை யாருமே அசைக்க முடியாது" என்ற சொல்லிக் கொண்டிருந்த அவரை ஒரு சிறு வாழைப்பழத்தோல் அசைத்து விட்டுவிட்டதாம். மறுபடியும் அவர் அசைவதற்கு எவ்வளவு நாள் ஆகுமோ? யாருக்குத் தெரியும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சர்வதேச சமூகத்தின் நிதியுதவிகள் நிபந்தனையுடனேயே வழங்கப்பட்டன

## சிஹல உறுமய அமைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் சர்வதேச சமூகம் நிபந்தனைகளுடனேயே இலங்கைக்கு நிதியுதவி வழங்கியுள்ளதாக சிஹல உறுமயக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாடு தொடர்பான செய்தியாளர் மாநாடு ஒன்றை சம்பிக்க ரணவக்க கூட்டியபோது, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சர்வதேச சமூகத்திடம் இருந்து பெறப்பட்ட இப்பாரிய நிதியுதவிகள் நிபந்தனைகள் இன்றியே வழங்கப்பட்டுள்ளன என்று காட்டுவதற்கு அரசாங்கமும் முயல்கிறது.

இந்நிதியுதவிகள் யாவும் பொருளாதார மற்றும் அரசியல் நிபந்தனைகளுடனேயே வழங்கப்பட்டுள்ளன. இந் நிபந்தனைகளின் பிரதிபலன்களை மக்கள் எதிர்காலத்தில் அனுபவிக்க நேரிடும் என்றும் கூறியுள்ளார்.

(ம)

## அரச படைகளின் அடாத்தான செயலால்,

# இடம்பெயர்ந்த மன்னார் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை

(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 216 இடங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் பரவலாக இவ்விதம் அரச படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதன் காரணமாக அங்குள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலை நீடிக்கின்றது.

22 பொதுக் கட்டடங்களிலும், 4 தென்னந்தோட்டங்களிலும், 1 இந்து ஆலயத்திலும், 1 கிறிஸ்தவ தேவாலயத்திலும், 55 தனியார் வீடுகளிலும் அங்கு பொலிஸார் நிலைகொண்டுள்ளனர்.

அத்துடன், 17 பொதுக் கட்டடங்களிலும், 55 தனியார் வீடுகளிலும், 2 இந்துக் கோயில்களிலும், 2 பாடசாலைகளிலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

மேலும், கடற்படையினர் 8 அரச கட்டடங்களிலும், 47 தனியார் வீடுகளிலும், ஒரு தென்னந்தோட்டத்திலும், ஒரு பனங்காணியிலும் நிலைகொண்டுள்ளனர் என திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள்மூலம் தெரியவந்துள்ளது.

(உ-8)

## இராசி பலன்

**14. 06. 2003**

**(வைகாசி 31, சனி)**

| | |
|---|---|
| பூரணை | பி.ப. 03.19 வரை |
| கேட்டை | மு.இ.07.02 வரை |
| இராகுகாலம் | 8.53 - 10.23 |
| சுபநேரம் | 2.53 - 04.23 |

பூரணை விரதம்

**மேடம்**
அமைதிக்குறைவு, காரியதாமதம், பிரயாண தடங்கல், வீண்தொல்லை.

**இடபம்**
கனஸ்திர நன்மை, வாகனசுகம், முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
சந்தோசமான சம்பவம், பொருள் சேர்க்கை, எண்ணங்கள் கைகூடும், ஆரோக்கியம்.

**கடகம்**
வ்யாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், எடுத்த காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு.

**சிங்கம்**
வேலைப்பளு, புத்தி சஞ்சலம், மாதாசுகம், தனவிரயம்.

**கன்னி**
புதிய சிந்தை, காரிய நன்மை, பிறர் உதவி, எதிர்பாராத சிறப்பு.

**துலாம்**
தேவையற்ற விவாதம், காரிய தடங்கல், வீண்செலவு, பெரியோர் வெறுப்பு.

**விருச்சிகம்**
நல்ல ஆதரவு, புதிய விடயம், காரிய அனுகூலம், விருந்துபசாரம்.

**தனுசு**
மனச்சோர்வு, உறவினர் மனஸ்தாபம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணச்செலவு.

**மகரம்**
தெய்வ சிந்தை, மனமகிழ்ச்சி, நல்ல பிரயாசை, தொழிலில் முன்னேற்றம்.

**கும்பம்**
எடுததகாரியம் கைகூடும், அதிகாரம், நல்ல நிகழ்வு, திடீர் நன்மை.

**மீனம்**
புதிய சிந்தை, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# பேச்சுவளம் குன்றியோர்க்கு சிகிச்சையும், கருத்துரையும்

## இன்று அகவொளி நிலையத்தில்

(கொழும்புத்துறை)

''பேச்சுவள சிகிச்சையும் மன நலமும்'' எனும் தலைப்பிலான விசேட கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் பேச்சுவள சிகிச்சை நிபுணர் கலாநிதி சௌமியா ரெட்னாயக்க இக் கருத்துரையை நிகழ்த்தவுள்ளார்.

இக்கருத்தமர்வில் பேச்சுநலம் குன்றியவர்கள், திக்குவாய்ப் பேச்சினர், நோய்களால் பேச்சுத்திறன் குன்றியவர்கள், இவர்களைப் பராமரிப்போர், பெற்றோர், ஆசிரியர், ஆலோசகர்கள், மருத்துவப் பணியாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அகவொளி இயக்குநர் ஆர்.நேசநாயகம் தெரிவித்தார்.

(உ-51)

# துரையப்பா விளையாட்டரங்க புனரமைப்பில் கருத்துமுரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றுவரும் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் சில கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

விளையாட்டரங்கினுள் காணப்படும் மனிதப் புதைகுழியிலிருந்து எலும்புக்கூடுகள் ஏற்கனவே மீட்கப்பட்டமை தொடர்பாக வழக்கு ஒன்று இருப்பதால், அந்த இடத்தைத் தவிர்த்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகர ஆணையாளர் கோரியிருக்கிறார்.

ஆனால், அரச அதிகாரிகள் புதைகுழியினைக் கருத்தில் கொள்ளாமல் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# விடுதிப் பிரச்சினையைத் தீர்க்க கல்வி அமைச்சர் முயற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் விடுதி சம்பந்தமான பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வுஒன்று காணப்படும் எனமூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்ஹாசிம் தெரிவித்துள்ளார்

அன்மையில், அனைத்துப்பல்கலைக்கழகங்களினதும் பதிவாளர்கள் பங்குபற்றிய கூட்ட மொன்றில்அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் தொடர்ந்தும் பேசிய அமைச்சர், இதற்கென பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்தும், பொது மக்களிடம் இருந்தும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இறுதித் தீர்மானத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொள்ளுமெனவும், நிதிப்பற்றாக்குறை காரணமாகவே இப்பிரச்சினை நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்து வந்தது.

பல்கலைக்கழகங்களில் உள்ள போதனைப்பீட நிர்வாக மற்றும் ஏனைய துறைகளில் தற்போது இருந்து வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரியிடமிருந்து நிதி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் அங்கு தெரிவித்துள்ளார்.

(தி)

# கொழும்புத்துறை முன்பள்ளியை அபிவிருத்திசெய்ய நிதியுதவி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையின தற்போதைய நிலையை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்பகுதி முன்பள்ளி மாணவர்கள் மரநிழலில் இருந்து கல்வி கற்பதை அவதானித்த அமைச்சர், மேற்படி முன்பள்ளிக்கான தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக உறுதிமொழியளித்தார்.

அத்துடன், அந்தப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்வதெனவும் கூறியுள்ளார்.

(உ-51)

**சூழல் எமது அன்னை - அதனை காப்பது எமது கடமை**

## அரசியல் யாப்புக்கு அப்பால்

# இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க பொ.ஐ.மு அனுமதியாது

## ஊடகப் பேச்சாளர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

**அரசியல் யாப்புக்கு அப்பால் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை.**

**பொதுஜன ஐக்கிய முன்னணி இருக்கும்வரை இவ்வாறானதோர் சம்பவம் இடம்பெறாது - இடம்பெறவும் விடமாட்டோம்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் நேற்று பத்திரிகையாளர்களைக் கூட்டி விளக்கமளித்த சரத் அமுனுகம மேலும் குறிப்பிடுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை நாட்டின் இறைமைக்கு இழுக்கை ஏற்படுத்துவதாக உள்ளது.

வடக்கு - கிழக்கில் அவர்கள் தனி நிர்வாகம் கோருவது நாட்டைப் பிளவுபடுத்தி இலங்கையின் ஸ்திரத் தன்மையை கேள்விக் குறியாக்கும் நோக்கமாக கொண்டது.

தற்போதைய நிலைமை திருப்தியளிக்காததாக அமைவதையிட்டு நாட்டினதும், மக்களினதும் பாதுகாபபைக் கருத்திற் கொண்டு முப்படைகளையும் நாடுமுழுவதும் உசார் நிலையில் வைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரியுள்ளோம்.

டோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதியுதிவி குறித்த முழுமையான விபரங்களையும் எம்மிடம் அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டும்.

நன்கொடைகள், குறுங்கால, நீண்டகால கடனுதவிகள் அவற்றின் வட்டிவீதங்கள், உலகநாடுகள் தமது நிதியுதவிக்கு முன்வைத்த நிபந்தனைகள் யாவற்றையும் எமக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வில் பொது ஜன ஐக்கிய முன்னணி என்றும் ஆர்வமாக உள்ளது.

அதற்கான உதவி ஒத்துழைப்புக்களை என்றைக்கும் நாம் வழங்குவோம்.

இனப்பிரச்சினைத் தீர்வென்பது இலங்கையின் இறைமையை விட்டுக்கொடுப்பதல்ல என்று குறிப்பிட்டார்.

(உ)

## நீர்கொழும்பு சிறை அதிகாரிகள் இருவர் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இருந்து இரண்டு சிறைக்கைதிகள் தப்பியோடியமை சம்பந்தமாக சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி அதிகாலை சிறைச்சாலை அதிகாரிகளைத் தாக்கி விட்டு தப்பித்து ஓடமுயன்ற 4 கைதிகளில் அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்குஇலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஆனால், இரு சிறைக் கைதிகள் சிறைச்சாலை மதிலேறி தப்பித்துச் சென்றுள்ளனர்ள . இச்சம்பவத்தை அடுத்தே இவ்விரு அதிகாரிகளும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறூம்மர்சூக் தெரிவிததுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்

## பழ. நெடுமாறன் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் வலியுறுததியுள்ளார்.

பொடா தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்படடுள்ள பழ. நெடுமாறனை நேற்று முன்தினம் சென்னை பூந்தமல்லி நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளை செய்தியாளர் மத்தியில் பேசும்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த பழ.நெடுமாறன், தமிழீழ விடுதலைப் புலிகளின் விவகாரத்தில் முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி கடைப்பிடித்த தவறான கொள்கைகளை பாரதிய ஜனதாக் கடசியும் கடைப்பிடித்தால் இது இந்தியாவின் நலனைப் பாதிக்கும்.

அதுதோடு, மத்திய அரசு பொடா சட்டத்தை மீளப்பெறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி,

ஈழத்தமிழர் விவகாரத்தில் மத்திய அரசு கடைப்பிடித்துவரும் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டியவை. இந்தியாவின் நிலைப்பாடுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்க ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அண்மையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாதது கவலைக்குரியது எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (தி)

## வைத்தியர்களின் வேலைநிறுத்தம் இடைநிறுத்தம்

# அரச ஆஸ்பத்திரிப் பணிகள் இன்றும் நாளையும் வழமைபோல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நாடு பூராகவுமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடந்த 4 தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டே நேற்று நள்ளிரவு 12 மணி முதல் இப்போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை வேலைநிறுத்தம் தொடரும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது இவ்விதமிருக்க யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்றும் கிளினிக்குகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவு என்பன மேற்படி போராட்டத்தினால் ஸ்தம்பிதமடைந்து காணபபட்டன இதனால் பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை பெற தூர இடங்களில் இருந்து சிரமப்பட்டு வந்த ஏழைப் பொதுமக்கள் பலரும் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பியதுடன் தமது நோய்களுக்குச் சிகிச்சை பெறும் வழியறியாது வாட்டமடைந்திருந்தமையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இன்றும் நாளையும் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிகள் வழமைபோல் இடம்பெறும் எனவும் தமது கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் திங்கள் முதல் மீண்டும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ் கிளைச செயலாளர் டாக்டர் எஸ்.குமாரவேல் தெரிவித்தார். (உ-77)

# சட்டவிரோத மண் அகழ்வு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தினமும் 50 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் அகழப்பட்ட மண்ணை ஏற்றுவதில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன், அப்பகுதியில் சட்டவிரோத வேம்பு, பூவரசு மரங்கள் தறிப்பு கட்டுப்பாடின்றித் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-51)

# செய்தித் துளிகள்

### கூட்டம்

(சுதுமலை)

யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அரசினர் வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள், பொறுப்பதிகாரிகள், நிறுவனத் தலைவர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் டாக்டர் கே.ரி.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-252)

### சிரமதானம்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஆனைக் கோட்டை உப அலுவலகப் பிரிவில், உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி சிரமதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நவாலி மேற்கு - ஆரியம்பிட்டி இந்துமயானம், ஆனைக்கோட்டை நவாலி - சங்கையான்வீதி ஆகியவற்றில் சிரமதானப்பணிகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி சிரமதான நிகழ்வுகளிற்கு நவாலி வடக்குகிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் ஈடுபடவுள்ளனர். (உ-252)

### சாரதிகள் வேலை நிறுத்தம்

(கண்டி)

கண்டி மாவட்ட பஸ் சாரதிகள் நேற்று முன்தினம் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

குண்டகசாலை, மெனிக்கின் மடவளை ஆகிய சாலைகளின் சாரதிகளே இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேரப்பதிவாளர் ஒருவரினால் பஸ்சாரதி ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வேலைநிறுத்தம் மேற்கொள்ளப் பட்டதாக தனியார் பஸ் சாரதிகளின் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார். (தி)

### உயர்தர வகுப்பு ஆரம்பிக்க அனுமதி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு அப்பகுதிப் பெற்றோர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, வடமராட்சி வலய கல்வித்திணைக்களம் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (உ-35)

### பரிசளிப்பும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையம் பிடாரி அம்பாள் வேள்வித் தினத்தை முன்னிட்டு நடாத்திய 12ஆவது பொது அறிவுப் ப்ரீட்சையின் பரிசளிப்பு விழாவும், கலைநிகழ்ச்சிகளும் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலையத் தலைவர் நா. சுரேஸ் தலைமையில் பிடாரியம்பாள் சனசமூக நிலைய அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிலையத்தலைவர் நா.சுரேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (உ-8)

### கலாசாரப் போட்டிகள்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் கலாசாரப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இப்போட்டிகளில் பேச்சு, நடனம், இசைக்கருவிகள் வாசிப்பு, வாய்ப்பாட்டு போன்றன இடம்பெறவுள்ளன. (உ-59)

### உள்ளூராட்சி வாரப் போட்டிகள்

(சுதுமலை)

வலி - தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்கள் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் பங்குபெறவுள்ளதாக வலி - தென்மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்துள்ளார். (உ-252)

### பொலிஸ்மா அதிபருக்கு ஹாட்லியில் விருந்துபசாரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவுக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வரவேற்பு விருந்துபசாரம் ஒன்றை நடாத்தவுள்ளது.

இம்மாதம் 21 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதியுமான எம்.நடராஜசுந்தரம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-52)

### கடலில் மிதந்துவந்த மரக்குற்றிகள்

(கொழும்பு)

கற்பிட்டிக் கடற்பகுதியில் மிதந்து வந்த பெறுமதிமிக்க 3 மரக்குற்றிகளைத் துறைமுக அதிகாரிகள் கைபற்றியுள்ளனர்.

இந்தோனேசியாவில் இருந்து கடத்தப்பட்ட பலலட்சம் ரூபா பெறுமதியான இக்குற்றிகள் பாரம் காரணமாக கடத்தலகாரர்களினால் தள்ளி விடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இக்குற்றிகள் தற்போது வன இலாகா அதிகாரிகள் வசமுள்ளன. (தி)

### சங்கீதக் கச்சேரி

(கொழும்பு)

சென்னையைச் சேர்ந்த கர்நாடக இசைமேதை திருமதி மு.சாவித்திரியின் சங்கீதக் கச்சேரி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இந்தியக் கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

### கணனிகள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

கனடாவில் உள்ள பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பழைய மாணவிகள் சங்கம், பாடசாலைக்கு இரண்டு கணனிகளை வழங்கியுள்ளது. இக்கணனிகளை பழைய மாணவிகள் சங்க உறுப்பினரும் பாடசாலையின் இளைப்பாறிய உப - அதிபருமான செல்வி தனலஷ்மி வேலுப்பிள்ளை, அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசனிடம் அண்மையில் கையளித்தார். (உ-52)


# இலகுவான நோய்த்தடுப்பு முறைகளை விளக்கும் சுகாதார நல மேம்பாட்டு நூல்

ஐரோப்பிய நாடுகளில் உங்கள் ஆரோக்கியம், சுகாதார நல மேம்பாட்டு நூல் (ஒன்று) என்ற **(A Health promotion Book)** பெயர் கொண்ட நூல், இலகுவான நோய்த தடுப்பு முறைகளும் விழிப்புணர்வும் என்று குறிப்பிடப்பட்டு வெளி வந்துள்ளது. திருமதி பூங்கோதை ஸ்ரீரஞ்சன் விஞ்ஞானப் பட்டதாரி (சிறப்பு) சுகாதார, சமூக விஞ்ஞானம் சவுத் பாங் பல்கலைக் கழகம் - இங்கிலாந்து அவர்களால் எழுதப்பட்ட இந் நூலின் அட்டை முன்பக்கம் மனித முழு உருவம் பொறிக்கப்பட்டு அட்டைப் பின் பக்கத்தில்நூலுக்கு முன்னுரை எழுதிய எழுத்தாளரும் விமர்சகருமாகிய ஜமுனா ராஜேந்திரனின் கூற்றில் இருந்து சில பகுதிகளைப் போட்டு, நூலாசியரின் சிறிய வர்ணப்படம் அவரின் பெயருடன் உள்ளது. நூலின் உள்ளே புகுவோமாயின் பதிப்புரையை அடுத்து நூலாசிரியரின் தாயார் அமரர் புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை ஆசிரியையின் அழகிய கறுப்பு வெள்ளைப் படம் அதன்கீழ் அன்னார்க்குச் சமர்ப்பிக்கின்றோம் என இருப்பது மிகவும் மனங்கொள்ளத்தக்கது.

தொடர்ந்து, பொருளடக்கம் எட்டுத்தலைப்புக்களில் உப தலைப்புப் பலவற்றுடன் உள்ளது. ஆசிரியர் முகவுரை, இந்நூல் ஆசிரியரைப் பற்றி... என்னும் தலைப்பில் தலைமை ஆசிரியர் இந்திரா பெர்னாண்டோவின் அணிந்துரை முன்னர் குறிப்பிட்ட முன்னுரை யாவும் அடுத்து, நூல் விடயங்கள் விளக்கம் பெற்றுள்ளன.

**பயன்பாடு**

மானிடவியல் வாழ்வு வளம் பெற அவர்தம் ஆரோக்கியம் அதிக அவசியமானது. ''சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம்'' அல்லவா? அந்த வகையில்: அளவுக்கதிகமான உடற்பருமனும் அதன் விளைவுகளும் உடற்பயிற்சியின் அவசியம் பெண்கள் நலம் என தலைப்புகளும் அவற்றின் ஆங்கிலப் பதங்களுடன் விளக்கங்கள் தொடர்கின்றன. ''ஐரோப்பிய நாடுகளில் உங்கள் ஆரோக்




கியம்'' என்னும் முதன்மைத் தலைப்பு நூலுக்கு இடம்பெற்றுள்ள போதிலும் இந்த நூலில் உள்ள விடயங்கள் யாவும் இவ்வுலகில் உள்ள தமிழ் கூறும் நல்லுலகத்தார் யாபேர்க்கும் அன்றி நூலுக்கு ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு வரும் பொழுது உலகின் சகலருக்கும் உதவும் என்பது தெளிவாகும். இலங்கையில் தமிழீழப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இந்நூலாசிரியை பூங்கோதை என்பதால் இலங்கை வாழ் தமிழர் சிறப்பாகப் பெருமைப்படலாம். நூலை முழுமையாக வாசித்தறியும் எந்த வாசகரும் நிச்சயமாகப் பயன் பெறுவர் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

காலத்தின் தேவை கருதி எழுதப்பெற்ற இந்நூல் பரவலாகத் தமிழ் மக்கள் கரங்களைச் சென்றடையும். நூலாசிரியர், நூல் (ஒன்று) என்று இந்நூலின் முகப்பட்டையில் குறிப்பிட்டிருக்கின்றார். மிகவும் பயன் தரும் இந்நூலை எழுதிய பூங்கோதை ஸ்ரீரஞ்சன் அவர்களைப் பாராட்டுவதோடு, மேலும் பணிதொடர வாழ்த்துவோம்.

| | |
|---|---|
| நூல் : | ஐரோப்பிய நாடுகளில் உங்கள் ஆரோக்கியம் (சுகாதார நல மேம்பாட்டு நூல் - ஒன்று) |
| ஆசிரியர் : | திருமதி பூங்கோதை ஸ்ரீரஞ்சன் B.Sc(Hons)Lon. சுகாதார , சமூகசேவை விஞ்ஞானம் |
| வெளியீடு: | கேம்பிறிச் பப்ளிக்கேசன் லிமிட்டட் |

கச்சாயூர் பண்டிதர்
கவிஞர் சுகச்வன்

**குறைபாடு:** எந்த ஒரு நூலிலும் உள்ளகத்தலைப்பை அடுத்து மறுபக்கத்தில் - தலைப்பு, முதற் பதிப்பு, பதிப்புரிமை, பிரதிகள் தொகை, விலைவெளியீடு, அச்சுப் பதிவு என்ற விபரங்கள் விரிவாகத் தமிழிலும், சுருக்கமாக ஆங்கிலத்திலும் அமைவது இயல்பு. அவை இல்லை. இல்லாதது இந் நூல் ''அன்பளிப்பு''என்ற ஐதீகத்தை உணர்த்தி நிற்கின்றது. தொடர்ந்துவரும் நூல்களில் நூலாசிரியர் இதனைக் கவனித்தல் அவசியம். அத்தோடு ஆசிரியர்

**திறனாய்வுக்களம்**

முகவுரையில், வாசகர்களின் குறை நிறைகளையும் தவறாமல் இந்நூலில் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைக்கக் கேட்டுவிட்டு உரியவிலாசத்தைக் குறிப்பிடத்தவறியுள்ளார்.

உதைபந்தாட்டப் போட்டித் தொடர்

# நயினை கணேசா வித்தியாலயம் தீவக சம்பியனாகத் தெரிவு

(சுண்டுக்குளி)

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும், அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து அகில இலங்கை மட்ட பாடசாலைகளுக்கிடையில், 15வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரின், ஓர் அங்கமான தீவகப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி, கடந்த செவ்வாயன்று வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் பெறுபேறுகள் வருமாறு:

நயினாதீவு கணேசாவித்தியாலய அணி நயினாதீவு மத்திய மகாவித்தியாலய அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வென்றது.

வேலணை சென்றல் வித்தியாலய அணி, ஊர்கவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

நயினாதீவு கணேசா வித்தியாலய அணி, புங்குடுதீவு வித்தியாலய அணியை மேலதிக உதையின்போது 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

வேலணை சென்றல் வித்தியாலய அணி, காரைநகர் யாழ்ற்ரன் வித்தியாலய அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

நயினாதீவு கணேசா வித்தியாலய அணிக்கும் வேலணை சென்றல் வித்தியாலய அணிக்கும் இடையில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலோ அல்லது அதன்பின் கொடுக்கப்பட்ட மேலதிக நேரத்திலோ, இரு அணிகளும் கோல் எதையும் போடாததினால், இரு அணிகளுக்கும் தலா 5மேலதிக உதைகள் கொடுக்கப்பட்ட போது, நயினாதீவு கணேசா வித்தியாலய அணி 4:2 என்ற கோல் கணக்கில் வென்று தீவக சம்பியனானது.

தீவகவலய உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் என்.லோகநாதனால் நெறிப்படுத்தப்பட்ட இப் போட்டிகளுக்கு, மத்தியஸ்தர்களாக ஏ.சுரேந்திரன், ஏ.அஜித்குமார், கப்ரின் டி.ஏ.எம் குணசிங்கம ஆகியோர் சுழற்சி முறையில் கடமையாற்றினர். (உ-110)

# மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற ஒரு நாளில் ஓரணியில் திரள்வோம்

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை**

(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஒரு யுத்தமின்றி ஒரு துளி ரத்தம் சிந்தாது. உயிரிழப்புக்களின்றி எமது வாழ்விடங்களில் இருந்து இராணுவத்ததை வெளியேற்றுவதற்கும் எமது பறிக்கப்பட்ட, மறுக்கப்பட்ட உரிமைகளை பெற்றுக்கொள்வதற்குமாக இந்த இறுதி சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒருநாளில் ஓர் அணியில் ஒன்று கூடுவோம். உரிமைகளை வென்றெடுப்போம். யாழ். பல்கலைக்கழக மாணவர ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும்,

உலகில் இனரீதியாக அடக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு மறுக்கப்பட்ட இனங்கள் தமது உரிமைக்கான போராட்டங்களில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளன. அந்த நாடுகளில் நடைபெற்ற உரிமைக்கான போராட்டத்தில் அந்த இனத்தைச் சார்ந்த அனைத்து மக்களும் தமது உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பாக தமக்குள் கலந்துரையாடி தெளிவடைந்த நிலையில் அவர்கள் ஒற்றுமையாக ஓரணியில் நின்றதன் மூலம் தமது உரிமைகளை வென்றெடுக்க முடிந்துள்ளது. அதுவே உலக வரலாறாகும்.

இதுபோன்று தான் கடந்த 20 ஆண்டு காலமாக பேசாமடந்தைகளாக இருந்த தமிழ் மக்கள் கடந்த 2001ஆம் ஆண்டு தமது உரிமைகள் பற்றி தமக்குள் கலந்துரையாடி அது பற்றி தெளிவடைந்த நிலையில் 2001 தை 17ல் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டு தமது விருப்பங்களை வெளிப்படுத்தியதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு ஏமது மறைக்கப்பட்ட பிரச்சினைகள், மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றி தெளிவுபடுத்தி அவர்களது ஆதரவைப் பெற முடிந்தது. அதன் மூலம் எமது பிரதேசத்தில் நடைபெற்ற யுத்தத்தினை நிறுத்தி உயிரிழப்புக்கள் சொத்து அழிவுகளையும் தடுத்து நிறுத்தி இரத்த ஆறு ஓடுவதையும் நிறுத்தி சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடியளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 6 கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையிலும் மக்களது வாழ்வில் இயல்பு நிலை தோன்றவில்லை. இதற்குக் காரணம் மக்களது வீடுகள் விவசாய நிலங்கள், பாடசாலைகள், கோயில்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் இராணுவம் நிலை கொண்டிருப்பதாகும்.

இந்த இராணுவம் தமிழ் மக்களது பாதுகாப்பிற்காகவே அந்த இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவத்தினரை மக்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுவது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் உண்மைக்குப் புறம்பான ஓர் மாயையை உருவாக்கி அதனை சர்வதேச சமூகத்ததிற்கு அரசு கூறிவருகின்றது.

இந்த உண்மைக்குப் புறம்பான அரசின் பொய்யான தகவலை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இந்நிலையில் மக்கள் கடந்த ஒரு வருட காலமாக மௌனமாக இருந்து வருவதால் சர்வதேச சமூகம் அரசின் கருத்துக்களை ஏற்றது போலவும் அரசிற்கு எவ்வித அழுத்தங்களையும் கொடுக்காது மௌனமாக இருந்து வருகின்றது. இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணி திரண்டு எமது கருத்துக்களை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் ஆயின் சர்வதேச ஆதரவைப் பெறுவதன் மூலம் எமது அன்றாட அடிப்படையான பிரச்சினைகளுக்கு சரியான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்காக அனைத்து மக்களும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக இம்மாதம் 27ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் அனைவரும் ஒன்று கூடுவோம். எமது கருத்துக்களை ஆசைகளை சர்வதேச சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும் உரத்துக் கூறுவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# விசாரணைக்குச் சென்ற குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்


**ம.உ.ஆ குழுவில் முறையீடு**

(தென்மராட்சி)

விசாரணைக்காக பொலிஸ் நிலையம் சென்றவேளை, தான் அங்கு நின்ற பொலிஸாரால் தாக்கப்பட்டதாக குடும்பஸ்தர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த நாகமுத்து கந்தசாமி (வயது 56) என்பவர் செய்துள்ள மேற்படி முறைப்பாட்டில், தான் கடந்த 10ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசாரணைக்காகச் சென்றசமயம் அங்கு விசாரணை மேற்கொண்ட அதிகாரி தன்னைத் தாக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ரூவான் சந்திரசேகர சமபந்தப்பட்ட பொலிஸாரை அடுத்த வாரம் விசாரணைக்குச் சமூகமளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். (உ)



இரண்டாவது இந்துமாநாட்டையொட்டி கொட்டடி ச.ச.நிலையம் நடாத்திய இந்து சமய நிகழ்வுகளில் கலந்து கொண்ட தமிழக அறிஞர்களையும், நிலையத்தின் தலைவர் ஸ்ரீராஜபுலேந்திரன், கலாசாரப் பொறுப்பளர் எஸ்.செல்வராசா ஆகியோரைய்யும் படங்களில் காணலாம்.




பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உரையாற்றுவதையும் மன்றத்தலைவி திருமதி கு.சூரியகுமாரி, செயலாளர் வீ.பாலசுப்பிரமணியம் வர்த்தகர் ஆர்.அருணாச்சலம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காண்கிறீகள். (படம்:பரு.நிருபர்)

# விவசாயப் பயன்பாட்டு இரசாயனங்களினால் ஏற்படும் சூழல் மாசடைவைத் தடுத்திட வேண்டும்

மனிதன் உயிர்த்தோற்றம் பெற்ற காலம்முதல் இன்றுவரை நிலத்தின் மூலமே தனது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகிறான். ஆரம்பகாலத்தில் வேட்டையாடி தன் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்தான். காலப்போக்கில் மனித இனத்தின் வளர்ச்சி அதிகரித்துச் செல்ல வேட்டையாடல் மூலம் உணவுத் தேவையை பூர்த்திசெய்ய முடியாதுபோகவே நிலத்தைப் பண்படுத்தி பயிர்ச்செய்கைமூலம் தன் உயிர் வாழ்க்கைக்கு தேவையான உணவினை பெற்றுக்கொள்ளத் தொடங்கினான். அன்று முதல் மனிதனும் நிலமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து பிரிக்கப்பட முடியாத இணைபுக்களாக மாறின. சனத்தொகை பெருக்க வீதமானது பெருக்கல் வீதத்தில் அதிகரித்துச் செல்லச் செல்ல உணவு உற்பத்தி அதிகரிப்பை கூட்டல் விகிதத்தில் வைத்திருக்க முடியாது. உணவு உற்பத்தியில் தன்னிறைவைக் காண வேண்டிய அவசியத்தினுள் மனிதவர்க்கம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. இதனால் உணவு உற்பத்தியை அதிகரிகும் நோக்கில் ஆரம்ப காலங்களில் மனிதன் தன் விவசாயம் செய்நிலப்பரப்பை காடுகளை அழித்து அதிகரிததுச் சென்றான் எனினும்,ஒரு கட்டத்தின்பின் சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப நிலப்பரப்பை அதிகரிக்க முடியாது மனிதவர்க்கம் குறைந்த நிலப்பரப்பில் அதிஉயர் உணவு உற்பததியை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

### விஞ்ஞான முன்னேற்றம்

எனவே மனிதன் உணவு உற்பததியை அதிகரிக்கக் கூடியதான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு பல்வேறு கண்டு பிடிப்புக்களை விவசாயச் செய்கைக்கு அறிமுகப்படுத்தி விவசாயத்தினை விஞ்ஞான மயப்படுத்தினான். இதனால் மிகையான பயிர் உணவினைப் பெற்று சாதனை நிலைநாட்டினான். பல்வேறுவகையான இரசாயனக் கண்டுபிடிப்புகள் விவசாயத் தினுள் புகுத்தப்பட்டன. கிருமிநாசினிகள், களைகொல்லிகள், செயற்கை உரவகைகள் என்பன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளாக விவசாயத்துள் புகுந்தன. இதனால் விவசாய உற்பத்தி எதிர்பார்த்தஅளவு முன்னேற்றம்அடைந்து மனிதன் விவசாயத்தை இயற்கையிடம்மிருந்து தன்வசமாக்கிக்கொண்டான் என்று சொல்லும் அதேவேளை மனிதனின் இத்தகைய கண்டுபிடிப்புக்கள் மனிதவர்க்கத்தை அழிக்கும் பாரிய பிரச்சினையாக உருவெடுப்பதை. மனிதவர்க்கம் உணரத்தவறி விடடதென்றே சொல்ல வேண்டும்.

விவசாயத்தேவைக்கு நிலப்பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு இயற்கை சூழலின் சமநிலை பங்கு சீரழிந்துவிட்டது. முற்காலங்களில் மாதம் மும்மாரிபொழிந்து நாடு செழிபபாக இருந்ததாக இலக்கியங்கள், வரலாறுகள், முன்னோர் வாயிலாக அறியமுடிகிறது. ஆனால் இக் கணனியுகத்தில் காடலழிப்பின் பயனால் மாரிபொய்த்துப் போவதும் அதனால் பெரும் போகம் சிறுபோகம் மற்றும் தானியச் செய்கை என்பன அழிந்து போவதும கண்கூடாகக் காணப்படுகினறன-நிகழ்வுகளாகமாறிவிட்டன. நெடிதுயர்ந்த மரங்கள் அழிக்கப்படுவதானால் மிக்க வரட்சி ஏற்படுகிறது. மனிதவர்க்கம் புதிய புதிய நோய்களைச் சந்திக்க நேரிடுவது மட்டுமன்றி, மண்ணரிப்பு அதிகரிப்பதன் மூலம் சிறிது காலத்தில் பெரும் நிலப்பரப்பு கடல்கொள்ளப்படும் பேரபாயமும் ஏற்பட்டுள்ளது.

### இரசாயனங்கள்

இரசாயனப் பாவனைபற்றி நோக்கும்போது கிருமிநாசினிகள், களைகொல்லிகள், செயற்கை உர பாவனைகள் என்பவற்றால் சுற்றுப்புறசூழல் மற்றும் நீர் என்பவற்றுக்கு ஏற்படும் தாக்கம் அதிகரித்து காணபபடுகிறது. கிருமிநாசினிகள், பயிர்களில் தாக்கத்தை விளவிக்கின்ற பூச்சிகள, புழுக்கள, கிருமிகளை அழிப்பதற்கு பயன்படுத்துகின்றன. இவற்றின் பாவனையானது இயற்கையில் காணப்படும் சம நிலைத் தன்மையைப் பெரிதும் பாதிப்பதுடன், இவற்றின் மூலம் கொல்லப்படும் பூச்சி புழுக்களை பறவைகள் மற்றும் ஊர்வன உண்பதனால்,

அவற்றின் மரண வீதத்தை அதிகரிக்கச்செய்து வண்டுகளின் ரங்காரத்தையும் புட்களின் நாதத்தையும் கேட்கமுடியாது செய்வதுடன், பிறஉயிர்களையும் அழித்துவிடுகினறன. முக்கியமாக பயிர்ச் செயகையின் போது பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களில் காணப்படும் நச்சுத் தன்மையானது மனித உயிர்களை சிலசமயம் நேரடியாகவும், சிலசமயம் மறை முகமாகவும் தாக்குகின்றது.. கிருமிநாசினகள் விசிறப்படும்போதும், கிருமிநாசினிகள் விசிறப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளும்போதும் மரணத்தை விளைவிக்கினறது. கிருமிநாசினிகள் விசிறப்படும்போது பெருமபகுதி தாவரங்களில் பதிகிறது. இது இலை, தண்டு பூ, காய், பிஞ்சு என்பவற்றில் நஞ்சுத்தன்மையை சுவறச் செய்கிறது. மிகுதி கிருமிநாசினிகள் வளிமண்டலத்திலும் நிலத்திலும் நீருடனும் கலக்கின்றன வளிமண்டலத்துடன் கலக்கும் கிருமிநாசினிகளால் வளிமாசடைந்து நாம் சுவாசிக்கின்ற தீயகாற்றானது நஞ்சுத் தன்மை அடைய வழிசெய்கிறது நிலத்தில் படிகின்ற இரசாயனப் பொருட்கள் பயிர்ச்செயகைக்கு நன்மை விளைவிக்கக் கூடிய உயிரினங்கள் மற்றும் நுண்ணங்கிகள் என்பவற்றையும் அழிக்கின்றன.

இரசாயனப் பாவனையால் நீர் மாசுபடுதல்பற்றி நோக்கும் போது பயிர்களுக்கு விசிறப்படும் இரசாயனப் பொருட்களில் ஏறத்தாழ 75% மானவை நிலத்துடனும் நீருடனும் சேர்கின்றன. எவ்வாறு எனில் ஆரம்பத்தில் விசிறப்படும் கிருமிநாசினிகள் பயிரிலும் ஏனையவை நிலம் நீர் வளி என்பவற்றிலும் படிகின்றன. நிலம், நீர், வழி இவற்றுள் ஆரம்பத்தில் 50% படிகிறது எனில் பயிர்களில் 50% படிகிறது. செய்கைக் காலம் முடிய அப்பயிர்வகைகளையும் நிலத்தில் புதைக்கப்படுகின்றன. அப்போது ஏறத்தாழ 25% நஞ்சுத்தன்மை நிலம், நீர் என்பவறுடன் கலக்கின்றது எனலாம். எனவே மொத்தத்தில்நீரான்து இக் கிருமிநாசினிகளின் பாவனையால் நஞ்சுத தன்மை அடைகிறது.

### புதிய கிருமிகள் உருவாக்கம்

நீரிலும் வளிமண்டலத்திலும் கலந்திருக்கும் நஞ்சுத்தன்மையானது நீராவியாதலின்போது உறிஞ்சப்பட்டு மழை மேகங்களுடன் கலபபதினால் அமில மழையாக பூமியை வந்தடைந்து அது தாவரங்கள் மற்றும் மரம்செடிகளில் விழும் போது அவை நஞ்சுத்தன்மையால் இறந்து அழிந்து விடும். நீர் நிலைகளில் விழும்போது நீர்நிலைகளில் உள்ள உயிரினம் அனைத்தும் அழிந்து போகும். இந் நீரைப் பருகும் பல்லாயிரக்கணக்கான, மனிதஉயிர்கள் அழிவதை எந்தவொரு விஞ்ஞானக கண்டுபிடிப்புக்களாலும் தடுக்கமுடியாது போகும் என்பது திண்ணமாகத தெரியும். அதேவேளை, மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்வதற்கு நன்கு கண்டுபிடித்த விஞ்ஞான நெறிகளால் அழியும் நிலை உருவாகும். உதாரணம் இன்று முழுஉலகமும் உறக்கமின்றி தவிர்கும் நிலையை உருவாக்கி உள்ள சார்ஸ் சுவாசநோய் போன்ற பல் வேறு விதமான புதிய புதிய கிருமிகளின் உருவாக்கத்தையும் தாக்கததையும் எதிர்கொள்ள நேரிடும்.

எனவே விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அத்தியாவசிய தேவைக்காக அளவுக்கு அதிகமான கிருமிநாசினி, களைகொலலி, செயற்கை உரபாவனை என்பவற்றைக் கைவிட்டு அல்லது குறைத்துக் கொண்டு, இயற்கை தந்திருக்கும் இயற்கை உரபாவனை அதிகரித்தல் மற்றும் இயற்கை கிருமிநாசினி முறைகளை பின்பற்றுதல் உதாரணம் வேப்பிலை, வேப்பம்

**ரஞ்சன் பாபு**

வித்து போன்றன சிறந்த கிருமிநாசினிகள். இவ்வாறான வழிவகைகள் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் எதிர்காலததில் மனிதஇனம் எதிர்கொள்ள நேரும் புது வகை நோய்கள் வராது தடுக்கவும் உதவும். மனிதன் நோயயற்ற வளமான வாழ்வை வாழ வழி வகுக்கும்.

* மாறிவரும் இயந்திர யுகத்தில் எவனொருவன் சூழல்பற்றி அக்கறை இன்றி இருக்கின்றானோ அவன் மூலம் சூழல் மாசடைதல் அதிகரிக்கும்.
* சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் கடமையாகும்
* சூழல் பேணின் சுற்றம் தளைக்கும்
* ஒவ்வொரு மனிதனும் தன் வீட்டையும் சுற்றுப்புறத்தையும், சுத்தம் செய்யின் சூழல் மாசடைதல் பூச்சியமாகும்.

## மரநடுகை விழா

(நவக்கிரி)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு, வலி-கிழக்கு பிரதேச சபையினால் நடத்தப்பட்ட மரநடுகை விழா கடந்த வெள்ளியன்று அச்சுவேலி தெற்கு கஜமுகன் பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

அச்சுவேலி உப அலுவலகச் செயலாளர் தி.மாணிக்கவாசகர் தலைமையல் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.பாஸ்கரன், விசேட ஆணையாளர் வெங்கடாசலம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வில்லிசைப்புலவர் ந.கணபதிப்பிள்ளை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபர் மகேஸ்வரதாஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(உ-233)

## வைகாசிப் பொங்கல்

(பருத்தித்துறை)

தென் புலோலியூர் மந்திகை கண்ணகை அம்பாள்ஆலய வைகாசிப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கோவலன் கண்ணகி கதை படிக்கப்பட்டு வருகின்றது. (உ-5)

## இளைஞர் குழுக்கள் அட்டகாசம்

(கொழும்புத்துறை)

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இபபகுதியால் செல்லும் பெண்பிள்ளைகளின் பின்னால் செல்லுதல், அவர்களுடன் அங்க சேஷ்டைகளில் ஈடுபட முயலுதல் ஆகியனவற்றில் ஈடுபடும் இவ் இளைஞர் குழுக்களைத் தட்டிக்கேட்பவர்கள் தண்டனைக்கு ஆளாவதாகவும் தெரியவருகிறது.

இதுவிடயம் குறித்து கலாசாரத்தைப்பேணும் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-51)

# ஒதுக்கப்படும் நிதியில் குறைப்புச்செய்வது நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும்

## ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கென ஒதுக்கப்படும் நிதியில் குறைப்புச்செய்தால், அது நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி இவ்விதம் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கான நிதியை எந்தக் காரணங்களின் அடிப்டையிலும குறைப்புச்செய்ய வேண்டாமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், அமைச்சரவைக்கும் அறிவித்துள்ளேன்.

பல்கலைக்கழகங்களுக்கென உலக வங்கியினால் ஒதுக்கீடு செயயப்பட்ட சுமார் 40 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவு செய்த விதம் குறித்து என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றார்.

பல்கலைக்கழகங்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகள் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதுடன் உபவேந்தர்கள் முன்வைத்த பிரச்சினைகள் சம்பந்தமாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் ஹபீர் காசிமுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் தெளிவுபடுத்துவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (தி)

## போதைப்பொருள் தடுப்பு அலுவலகத்தில் தற்கொலைசெய்த இலங்கையரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு

(கொழும்பு)

சென்னைப் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அலுவலகத்தில் தற்கொலை செய்துகொண்ட இலங்கையரான சூரியசந்திரனின் உடலை பரிசோதனை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி இறந்தநபரின் சகோதரி சிறைச்சாலை அதிகாரிகள் காவலில இருந்தபோது விசாரணை என்ற பேரில் அடித்துக் கொலைசெய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செயயப்பட்டதுடன் சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்ததை அடுத்து நீதிமன்றம் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி 100 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை இலங்கைக்குக் கடத்த முயன்ற நால்வரை தமிழகப் பொலிஸார் சென்னைப் புறநகர் ஆலந்தூரில் வைத்து கைது செய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரே மறுநாள் தான் அணிந்திருந்த சேட்டைப் பயன்படுத்தி சிறைச்சாலையில் தூக்குப் போட்டு இறந்திருப்பதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## சமாதானப்பணியில் பெண்கள் ஆய்வுப்பட்டறை இன்று ஆரம்பம்

(தென்மராட்சி)

சமாதானப்பணிகளில் பெண்களை ஊக்குவிப்பது தொடர்பான இருநாள் ஆய்வுப்பட்டறை இன்றும் நாளையும் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினிஅம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்ள உள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் இணைபபாளர் லக்ஸ்ஸன் டயஸ், டாக்டர் திருமதி ஜஸ்மின் தம்பையா, அமெரிக்க ஒத்துழைப்பு நிறுவனத்தைச்சேர்ந்த ரி.கலைமகள் ஆகியோர் சமாதானப்பணிகளில் பெண்களை ஊக்குவிப்பது தொடர்பான கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிவில்சமூக உறுப்பினர்கள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்னோர் இந்த ஆய்வுப்பட்டறையில் பங்கேற்க உளளனர். (உ-77)

## அரச வைத்தியர்கள் பொதுவேலை நிறுத்தம் பொ.ஐ.மு.கண்டனம்

(கொழும்பு)

மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த நான்குநாட்களாக மேற்கொண்டு வரும் பொதுவேலை நிறுத்தத்தை பொதுஜன ஐக்கிய முனனணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால சிறிபால் டி சில்வா நேற்று கடந்த செய்தியாளர் மாநாடடில் வன்மையாக கண்டித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்காக நோயாளிகளை பணயம் வைப்பது கண்டிக்கத்தக்கது.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையிலும் விளையாட ஆரம்பித்துள்ளது.

வைத்தியர்களின வேலை நிறுதப் போராட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது வறுமைப்பட்ட மக்களே என்று தெரிவித்துள்ளார். (தி)

## விசேட பொங்கல்

(அராலி)

அராலி கிழக்கு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இறுதிநாள் நிகழ்வான இன்று விசேட பொங்கல் மற்றும் அபிஷேகம் என்பன இடம்பெறவுள்ளன. (உ-214)

# தொடர்ந்தும் தள்ளிப்போகுமா வடகிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்?

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலுக்கு இன்னும் 11 தினங்களே இருக்கின்றபோதும், தேர்தலை ஒத்திவைப்பதற்கான பிரகடனமோ அல்லது ஏற்கனவே ஏற்கப்பட்ட நியமங்களை ரத்துச் செய்வதற்கான சட்டத்திருத்தமோ இதுவரை மேற்கொள்ளப்படாமையால் மேற்படித் தேர்தல் குறித்த நிச்சயமற்ற இரண்டும் கெட்டான் நிலை வடகிழக்கில் நீடிக்கின்றது.

இதேவேளை, நியமனப் பத்திரங்கள் வாபஸ் பெறுவதற்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை அடுத்தே வடக்கு கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறித்து கருத்துக் கூற முடியும் என தேர்தல் திணைக்கள முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பாக எதிர்வரும் 18ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்கா உயர் மாநாடு ஒன்றை நடத்தவிருப்பதாகவும்,

இம்மாநாட்டிற்கு வடக்கு கிழக்கு மாகாண அரச அதிபர்கள், உயர் பாதுகாப்பு அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், மாவட்டங்களின் தற்போதைய நிலை குறித்துஅறிக்கை மற்றும் இடம்பெயர்ந்தோர் பற்றிய விபரங்களை இம்மாநாட்டில் சமர்ப்பிக்கும்படி தேர்தல் ஆணையாளர் அரச அதிகாரிகளைக் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க எதிர்வரும் 25ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.சி.அருந்தவச்செல்வன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய 3 மாநகர சபைகளுக்கும், 6 நகர சபைகளுக்கும், 44 பிரதேச சபைகளுக்கும் இத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான வேட்பு மனுக்கள் கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கோரப்பட்டமையால் புதிதாக வேட்பு மனுக்கள் கோரப்படமாட்டாது.

இதேவேளை, பழைய் வேட்பு மனுக்களை நிராகரித்து புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கான சட்டமூலம் ஒன்று தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாற்றம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-10)

# பேச்சுவார்த்தையில் மீண்டும் இணைவது குறித்த முடிவை விடுதலைப்புலிகளே எடுக்க வேண்டும்

## அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸ்

(கொழும்பு)

சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் ஆசையை நிறைவேற்றுவதற்கு மீண்டும் பேச்சுவார்த்தைகளில் இணைந்து கொள்வதா என்பதையும் டோக்கியோ மாநாடு மூலம் கிடைத்த 4.5 பில்லியன் டொலர் நிதி மீண்டும் பேச்சிற்கு வர போதுமாக அமையுமா என்பதையும் விடுதலைப்புலிகளே தீர்மானிக்க வேண்டும் என அமெரிக்கத்தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை முடிவடைந்த பின்னர் அமெரிக்கத் தூதுவரான அஸ்லி வில்ஸ் பத்திரிகையாளர்கள் சிலர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், 'காலம் வீணாகிக் கொண்டு போகிறது' இலங்கை மக்களும் பொறுமையை இழந்து காணப்படுகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு சர்வதேச நாடுகளும் தேவையான அளவு நிதியை வழங்கி வருகின்றன.

இம் மாநாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பணம் காத்திரமானது. இது உதவிவழங்கும் நாடுகளின் நன்னோக்கத்தையே எடுத்துக்காட்டுகிறது.

வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்பவும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் அபிவிருத்தி செய்யவும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

அத்துடன் நாட்டின் இளைய சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்கும் இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

எனவே, நாட்டின் சகல நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி இருப்பதால் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து விலகியிருப்பதை காரணம் காட்டி எவரும் வீணாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றார். (உ-10)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 102வது வெளியீடான தில்லைச்சிவன் எழுதிய 'காவல் வேலி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் த.இராஜரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-8)

## துறைசார் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் நடாத்தும் 'வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலான மாதாந்த துறைசார் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கழக மண்டபத்தில் பிரம்மகுமாரி லேகாவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பம்பலப்பிட்டி இராஜயோக நிலையப் பொறுப்பாளர் பிரம்மகுமாரி இரஞ்சி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ-8)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை இடம்பெறவுள்ளது. காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், தொடர்ந்து திருநாட் திருப்பலியும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் தலைமையில் இடம்பெற வுள்ளது. நற்கருணைத் திருவிழா இன்று பி.ப. 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-8)

# யுத்தத்தின் பிடியில் இருந்து மக்களை மீட்பதற்காகவே பிரதமருக்கு ஆசியான் விருது

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நீண்ட கால யுத்தத்தின் பிடியிலிருந்து மக்களை மீட்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ரைம்ஸ் சஞ்சிகை 'ஆசிய நாயகன்' விருதை வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற ரைம்ஸ் சஞ்சிகையின் ஆசிய வீரர் விருது வழங்கும் விழாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பாக விருதைப் பெற்றுக் கொண்டு அங்கு உரையாற்றுகையிலேயே பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரைம்ஸ் சஞ்சிகையின் ஆசிய வலயத்துக்கான விருது வழங்கும் நிகழ்வில் பல்துறைகளையும் சேர்ந்த 20 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் அரசியல் சார்ந்தவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காணப்பட்டார்.

இலங்கையில் இருந்து ஆசிய விருதைப் பெறும் முதலாவது நபராக பிரதமர் கணிக்கப்படுவதுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முடிவு காண முற்பட்டதனாலேயே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. (தி)

# டோக்கியோ நிதிமூலம் தோட்டப் பகுதிகளும் புனரமைப்பு

## அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் ஜப்பானில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் நிதி மூலம் அரசாங்கம் வடக்கு கிழக்குப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யும்.



இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் களுத்துறை மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களுக்கு நிதிஉதவி வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் பேசிய அமைச்சர்,

டோக்கியோ மாநாட்டில் இலங்கை எதிர்பார்த்ததை விட கூடுதலான நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்நிதியைக் கொண்டு வடக்கு கிழக்கு உட்பட தென்பகுதியை எந்த வித வேறுபாடுகளுமின்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு கிடைத்துள்ளது.

அரசின் இன்றைய சமாதான நடைமுறைகள் காரணமாக உதவி வழங்கும் மாநாட்டில் எதிர்பார்த்ததை விடக் கூடுதலான நிதி கிடைத்துள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதியில் புதிதாக 7 தபால் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், போரினால் பாதிக்கப்பட்ட தபால் நிலையங்களையும், தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்களையும் புனரமைத்து அப்பகுதிகளின் நலவாழ்வுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியுதவி மூலம் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இத்தாலி செல்ல முயன்ற 20 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு கடற்கரைப் பிரதேசத்தில்இருந்து சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 20 இளைஞர்களை நீர்கொழும்புப் பொலிசார் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 20 இளைஞர்களும் திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

முகவர் ஒருவர் இவர்கள் அனைவரையும் இத்தாலி அனுப்பி வைப்பதாகக் கூறி இவர்களிடமிருந்து தலா 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக நீர்கொழும்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டம்மிக்க அனந்த தெரிவித்துள்ளார்.

தற்போது இம்முகவரை கைது செய்ய விசேட குழுவொன்று தேடுதல் நடத்திவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# கல்வித் திணைக்கள வளாகத்திற்கு வெளிக்கள நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் யாழ். வலய கல்விப் பணிமனை வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

தொண்டைமானாற்றில் இருந்து இடம்பெயர்ந்துஇதுவரை காலமும் இருபாலையில் இயங்கிவந்த இந்நிலையம் அங்கிருந்து செயற்பாடுகளை ஆற்ற வசதிகள் போதாமையால் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

மீண்டும் தொண்டைமானாறு செல்வதற்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும் வரை இவ்வளாகத்திலேயே நிலையம் இயங்கவுள்ளது.

உயர்தர வகுப்பிற்கான பரீட்சைகள், புள்ளி வழங்கல் திட்டங்கள், ஆசிரியர் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் என்பன இந்நிலையம் மூலமே நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இனிவரும் காலத்தில் மேலும் பல புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-4)

## அடிக்கல் நாட்டல்

(தம்பசிட்டி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தீர்த்தக் கடற்கரையில் புதிதாக கிருஷ்ணன் கோயில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று முன்தினம் நா.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாலயத்திற்கான அடிக்கல்லினை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாட்டிவைத்தார். (உ-45,52)

# ஈ.பி.டி.பி. அமைப்பாளருக்கு நீதிமன்றம் பிடியாணை

(மட்டக்களப்பு)

ஈ.பி.டி.பி அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பிரதீபனுக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பாகவே அவருக்கு கடந்த 5ஆம் திகதி இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, அமைப்பாளர் பிரதீபன் பொலிஸ் பாதுகாப்புடன் மட்டக்களப்பில் நடமாடி வருவதாகவும், மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-14)

சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி
– குறள்

# வலம்புரி

## அமெரிக்காவின் ஊடுருவல்

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்குண்டு.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், பிரதரமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதும், யுத்தத்தை நிறுத்தி வைத்ததும், டோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறும், அதில் அதிக நிதி உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அல்ல.தமிழர்களின் உரிமைகள் சரியான முறையில் வழங்கப்படுமாயின்,இந்த அழகிய இலங்கைத் தீவில் நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற கருத்தை தலைவர் பிரபாகரன் யுத்தம் நடைபெறுக் கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகள் இராணுவ மையங்களை ஆக்கிரமித்து வெற்றிவாகை சூடிய காலத்தில்,தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படையில்,சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேசக் கரம் நீட்டிய போது, அதனைத் தலைவர் பிரபாகரனும் ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாக இன்று நாட்டில் குண்டுச் சத்தங்கள் ஒய்ந்து மரண ஓலங்கள் அமைதி கண்டுள்ளன.

இந் நிலையில், ஆர்வத்தோடும்,திறந்த மனத்துடனும் சமாதான முயற்சியை முன்னெடுத்த விடுதலைப் புலிகள் எதற்காக சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தி உள்ளனர் என்பதை உலக நாடுகள் குறிப்பாக,எதற்கெடுத்தாலும் தமிழர்களுக்கெதிராக அறிக்கை விடும் அமெரிக்கா உணர்ந்துகொள்ள வேண்டும்:மாறாக ஒஸாமா பின்லேடன் உலக சட்டம்பியான தனது இரண்டு நகரங்களைத் தாக்கி விட்டான் என்பதற்காக உலகில் உள்ள தீவிரவாத அமைப்புக்களை எல்லாம் அழித்தொழிக்க வேண்டுமென அமெரிக்கா நினைப்பது வீட்டிற்கு வெளிச்சம் வருவதற்காக கூரையை எரிக்கும் குருட்டுத்தனமான முடிவாகும்.

பின்லேடன் நடத்திய தாக்குதலை மையப்படுத்திக் கொண்டு,எல்லா அமைப்புக்களையும்,அதன் வழியில் சிந்திப்பது அமெரிக்கா விடுகின்ற பெரும் தவறாகும் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை,உரிமைப் போராட்டம் என்பது அவர்களின் தலையில் சிங்களப் பேரினவாதம் சுமத்திவிட்ட தவிர்க்க முடியாத பாரமாகும்.

உரிமைப் போராட்டத்தை தமிழர்கள் ஆரம்பிக்கத் தவறியிருப்பின், தமிழர்கள் ஒரு காலத்தில் இலங்கையில் வாழந்தார்கள் என்ற வரலாற்றோடு புதிய மகாவமசம் பிறந்திருக்கும்.

எனவே, எதற்கெடுத்தாலும் விடுதலைப் புலிகளை வற்புறுத்தும் அமெரிக்கா சற்று நிதானமாக நடுநிலையோடு சிந்திப்பது அவசியமாகும்.

## நிர்வாகத்தை இலகுபடுத்த கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

நிர்வாக நடைமுறைகளை இலகுபடுத்தும் விதத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரித்து இரு பிரதேச செயலகங்களாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் வலி.கிழக்கு, தென் பிரதேச செயலகம்,வலி.கிழக்கு-வட பிரதேச செயலகம் என இரு புதிய பிரதேச செயலகங்கள் இயங்கவுள்ளன.

மேற்படி பிரதேச செயலகம் தொண்டமானாற்றின் கரையோரப் பகுதி முதல் கல்வியங்காட்டின் ஒரு பகுதி வரையான பெரிய நிலப்பரப்பைக் கொண்டதாக அமைவதுடன் 17 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 59 ஆயிரத்து 161 பேரைக் கொண்டதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## துறைமுகப் பாதுகாப்புச் சட்டத்தை அமெரிக்கா விஸ்தரித்தது

(கொழும்பு)

துறைமுகப் பாதுகாப்புச் சட்டத்தை அமெரிக்கா விஸ்தரிக்கவுள்ளது.இதன் அடிப்படையில் இலங்கையுட்பட 25 நாடுகளின் துறைமுகங்களின் பாதுகாப்பைக் கண்காணிப்பதற்காக அமெரிக்கா அதிகாரிகளை அந் நாடுகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

உயிரியல் மற்றும் இரசாயன அணுவாயுத் தாக்குதல்களை தடுக்கும் முயற்சிகளில் இது ஒரு அம்சம் என அமெரிக்க உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உட்பட கேந்திர முக்கியத்துவங்களைக் கொண்ட ஆசிய, ஆபிரிக்க,இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடன் இவ் விடயம் சம்பந்தமான உடன்படிக்கைகள் அமெரிக்காவினால் கைச்சாத்திடப்பட்டு வருகின்றன.

கொள்கலன் பாதுகாப்பு முன் முயறசிகள் என்ற திட்டத்தின் இரண்டாவது கட்டமாக இது அமைகிறது. செப்டம்பர் 11-ம் திகதி அமெரிக்க பென்ரகன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தினை அடுத்து இத்திட்டம் ஆரம்பமானது.

இதற்கமைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் கொள்கலன்களை தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சிகளில் அமெரிக்க அதிகாரிகள் வெளிநாட்டுத்துறைமுக அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவுள்ளனர். (தி)

## நிவாரணத்துக்கான அரிசியை மன்னாரில் கொள்வனவு செய்க

### மன்னார் அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை,உலர் உணவு விநியோகத்திற்குத் தேவையான நெல்லை மன்னாரில் கொள்வனவு செய்யுமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் போதியளவு நெல் களஞ்சியப் படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,குடா நாட்டு மக்களின் நிவாரண விநியோகத்திற்கான அரிசியை உளளூரில் ப.நோ.கூ.சங்கங்கள் நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு அரச அதிபர் அனுமதி வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்கள் மலிந்துள்ளன

### கூ.அபிவிருத்தி ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாண்ம்)

அர்ப்பணிபுச் சிந்தனையுள்ள கூடட்டுறவாளர்களினால் நல்ல நிலையில் கட்டி எழுப்பப்பட்ட கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் தலையீடுகளும் ஊழல்களும் மலிந்து காணப்படுகின்றன.

இதானல் கூட்டுறவு இயக்கம் இன்று நலிவுற்ற நிலையில் காணப்படுகிறது.இவ்வாறு கவலை வெளியிட்டார் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற யாழ். மாவட்டத்தில் யூ.என்.டி.பி நிறுவனத்தின் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமான செயற்பாடுகளின் வெற்றி குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இளங்கோவன் மேலும் கூறியதாவது;

யுத்த காலத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யுத்த அனர்த்தங்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை எவராலும் மறக்க முடியாது.

கூட்டுறவு நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் மக்கள் மயப்படுத்தப்பட்டு அவர்களை இலகுவில் சென்றடையக் கூடியதாகவும் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் வகுக்கப்பட வேண்டும்.

இத்தகைய கருத்திட்டங்களைத் தயாரிப்பவர்கள் விருப்பு,வழிகாட்டுதல்,ஒழுக்கம்,அர்ப்பணிப்புடன் செயறபடக் கூடியவர்களாக இருக்க வேணடும் என்று குறிப்பிட்டார். (உ)

## வருடாந்த உற்சவம்

(அராலி)

அராலி வடக்கு மயிலியற்புலம் அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-214)

### தினசரி தியானம்

## அகங்காரம்

மனிதனின் ஆபத்தான பலவீனங்களில் ஒன்று அகங்காரம்.அது அவனுக்கு வீழ்ச்சியைத் தருகிறது.அகங்காரமாக இருப்பது அறியாமையே.சில சிறப்புகள்,உடைமைகள்,அழகு, வலிமை,புத்திசாலித்தனம் ஆகியவை மனிதனுக்குப் போதை ஊட்டுகின்றன.ஆழமாக அகங்காரம் வேரூன்றி விடுகிறது, அடக்கத்தாலும் மற்றும் அறிவாலும் இதனை முற்றும் அழிக்க வேண்டும்.

சுவாமி சிவானந்தர்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

கடந்த நான்கு நாட்களாக வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசாங்க மருத்துவர்களுக்கு 20 சதவீத சம்பள அதிகரிப்பை அரசாங்கம் வழங்கினால் அதனை கடுமையாக எதிர்க்கப்போவதாக பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

கோதாகொட சம்பள குழுவின் பரிந்துரையின் படி அனைத்து மருத்துவ சேவையாளர், தாதிமார் பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு 7.1 சதவீதமான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. இதன்படி அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டுமென பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் திபினகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவவர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களுக்கும் இடையில் சம்பள முரண்பாடு அதிகம் இல்லையென அரசாங்க மருத்துவர்கள் சங்கம் தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## போதைப் பொருள் கடத்தலை தவிர்க்க விஷேட கருவி

(கொழும்பு)

நாட்டுக்குள் போதைப் பொருட்களைக் கொண்டு வருவதைக் கண்டு பிடிப்பதற்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விஷேட கருவி ஒன்று விரைவில் பொருத்தப் படவிருப்பதாக உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் பயணிகள்,கடத்தல்காரர்கள் ஊடாக போதைப் பொருட்கள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது விமான நிலையத்தில் சுங்கத்திணைக்கள அதிகாரிகள் அதற்கான கடமையில் ஈடுபட்டிருந்தாலும்அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்கிறது.இதனை ஒடுக்கும் வகையிலேயே அரசு மேற்படி முயற்சியில் இறங்கியுள்ளது. (உ-8)

## யாழ்.இந்துவின் பிரதி அதிபர் ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

38 வருடங்களாக சேவை புரிந்த மூத்த ஆசிரியரும் யாழ்.இந்துக் கல்லூரியின் பிரதி அதிபருமாகிய பே.சிவசுப்பிரமணிய சர்மா தனது சேவையில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

யாழ்.இந்துக் கல்லூரியில் 1991-ம் ஆண்டு முதல் பகுதித் தலைவராகவும்,1995-ம் ஆண்டு முதல் உப அதிபராகவும் இவர் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமியின் குருபூசையை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிககு நல்லூர் சட்டநாதர் தேவஸ்தானத்தில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு அபிஷேகம்,வழிபாடு,திருமுறைப் பாராயணம் ஆகியவற்றை நடத்தவுள்ளது.

பின்னர் நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மண்டபத்தில் ஞானசம்பந்தப் பெருமான் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (உ-8)

## மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சி

(தென்மராட்சி)

வடபிராந்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் சேவை நிலையங்களின் இணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியில் கடந்த சனி,ஞாயிறு தினங்களில் ஆசிரியர்களுக்கான மனித மேம் பாட்டுக் கல்விப் பயிற்சி நடாத்தப்பட்டது.

25 ஆசிரியர்கள் பங்கேற்ற இப் பயிற்சியினை பேராசிரியர் செ.சிவ ஞானசுந்தரம்(நந்தி)தலைமையிலான குழு நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மின்சாரம் தாக்கி கான்ஸ்டபிள் பலி

(வவுனியா)

றிசேவ் கான்ஸ்டபிள் ஒருவர் மின்சாரம் தாக்கி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மன்னார் பொலிஸ்நிலையத்துக்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பதுளையைச் சேர்ந்த சம்சுதின் (வயது28) என்ற கான்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (தி-13)

## பாதீனியம் அழிப்பு

(அராலி)

வட்டுக்கோட்டை சங்கானைப் பகுதிகளில் பாதீனியக்களை வேகமாகப பரவி வருகிறது.வெறும் காணிகளில் மற்றும் தோட்டங்களில் இது பரவி வருவதையடுத்து அழிகும் நடவடிக்கையில் சங்கானைப் பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர். (உ-214)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

(கொழும்பு)

ஆறுமாதக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் மர்மமான முறையில் இறந்துள்ளனர்.

இச்சம்பவம் மாத்தளை மாவெலப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

தாயும் இரு குழந்தைகளுமே இவ்வாறு இறந்துள்ளனர்.இது கொலையா அல்லது தற்கொலையா என்பது குறித்த விசாரணைகளை மாத்தளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (தி)

## ஆண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 41-வது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மன்றத் தலைவி திருமதி சூரிய குமாரி புலேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும்,பிரதம விருந்தினராக உளளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-52,45)

## 46 மில்லியன் நஷ்டம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக தேயிலைத் தொழிற்துறைக்கு 46 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக,துறையின் தலைவர் இ.கே.ஹேமரட்ண தெரிவித்துள்ளார்.

களுத்துறை,காலி,மாத்தறை, நுவரேலியா ஆகிய இடங்களில் உள்ள 21 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு இதனால் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## விபரம்கோரல்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள நகர சபைகள், பிரதேச ச்பைகளில் முதல் 5 மாத காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட குடியிருப்பு வீடுகள், குடியிருப்பு அல்லாத முறையில் அமைக்கப்பட்ட கட்டடங்கள், தனியார் வியாபார நிலையங்கள் ஆகியவற்றின் மொத்தப்பரப்பளவு போன்ற விடயங்களை உப அலுவலகங்கள் ரீதியாக புள்ளி விபரவியல திணைக்களம் கோரியுள்ளது.(உ-252)

புலிகளை வீழ்த்த அரசும் சர்வதேசமும் இணைந்து பொறிவைக்கின்றன

# அமெரிக்க நலனைப் பேணுவதிலேயே நோர்வே அக்கறை கொண்டுள்ளது

## அரசறிவியல் விரிவுரையாளர் கணேசலிங்கம் கருத்து

(தென்மராட்சி)

இந்தப் பிரதேசத்தில் இனிமேல் ஒரு புறசக்தி கால்வைப்பதென்பது ஒரு அரசியல் ரீதியான சமாதான வழி முறையூடாகத் தான் சாத்தியப் படுமேயொழிய இராணுவ ரீதியாக சாத்தியப்படமாட்டாது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூக அரசறிவியல் துறையின் விரிவுரையாளரான கே.ரீ.கணேச லிங்கம் கைலாசபதி கலையரங் கில் நேற்றுப் பிற்பகல் ''இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும் உலக ளாவிய சவாலும் ஓர் சமகாலப்பார்வை" என்னும் தலைப்பில் இடம் பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட இக்கருத்தரங்கு ஒன்றியத் தலைவர் எஸ்.பகீரதன் தலைமை யில் நடைபெற்றது.

நிகழ்வில் விடுதலைப் புலிக ளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் பல் கலைக் கழகத்தின் வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவும் பொதுச் சுடரை ஏற்றிவைத்தனர்.

இக் கருத்தரங்கில் கல்வியா ளர்கள்,போராளிகள் மற்றும் மாண வர்கள் எனப் பலர் பங்கு கொண் டிருந்தனர்.

விரிவுரையாளர் கே.ரீ.கணேச லிங்கம் தொடர்ந்து கருத்துரையாற் றும் போது,

புரிந்துணர்வு உடன் படிக்கையின உள்நோக்கங்களை பருமட்டாக நோக்கும் போது,ஆபத்து மிக்க தென்ற தமிழர் தரப்பின் எச்சரிக்கை கருதுகோளாக அமைகிறது.புரிந் துணர்வின் பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக் கைகள்,அவரது அரசுக்கும் அவர் சார்ந்த நாட்டுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தினாலும்,தமிழர்களையும் அவர்களது பிரதேசத்தையும்,கலா சாரத்தையும்,பொருளாதார வளங் களையும் சூறையாடுவதற்கான பின் தளமாகவே புரிந்துணர்வு பயன் படுத்தப்படுவது போல தென்படு கிறது.

அத்தகைய பின்தளத்தில் இருந்து உத்வேகமான தேசிய பற் றுதலை உடைத்து மக்களையும் போராட்ட அமைப்பையும் அதனோடு உறுதுணையான சக்திகளையும் முரண்பட வைப்பதையே நோக்க மாகக் கொண்டு உடன்படிக்கை யும்,பிரதமர் ரணிலும் செயற்படுவது தெளிவாகத் தெரிகிறது.

அவர் தனக்குத் துணையாக இந் தியர்களை மட்டுமல்ல அமெரிக்கர் களையும்,யப்பானியர்களையும் வைத்திருக்கின்றார்.

வாஷிங்டனிலும்,டோக்கியோ விலும் இடம் பெற்ற மாநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கு கொள்ளாமைதங்களுடைய நிலையைத் தக்க வைத்துக் கொள்வதும்,தங் களின் மக்களுடைய பொருளாதார நிலையை பாதுகாத்துக் கொள்வ தையும் இலக்காகக்கொண்ட சாத் தியப்பாடான .வழியாகவும் கருத லாம்.

டோக்கியோ மாநாட்டில் விடு தலைப் புலிகள் பிரசன்னமாவர் என அமெரிக்காவெகுவாக எதிர்பார்த் திருந்தது.இம் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பிரசன்னமாகியிருந்தால் பெரியளவில் நிதியுதவி வடக்கு கிழக்கிற்கும் புலிகளுக்கும் சாத்தியப் பாடாகியிருக்கும்.

இந்த நிலை ஏற்பட்டிருந்தால் எமது பிரதேசத்தில் இருக்கின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் எண் ணிக்கைகள் அதிகரித்து விடும். இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் ஒதுக்கப்பட்ட 4.5பில் லியன் டொலர் நிதியைப் பயன் படுத்துப் பணிசெய்ய பல யப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்கள் இங்கு வருகைதரத் தயார்நிலையில் உள்ளன.அவர்கள் இங்கே என்ன நோக்கத்தில் செயற்படுவார்கள் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் சாம்பல் மேடாக இருந்த யப் பானை யாப்பானியர்கள் எப்படிக் கட்டியெழுப்பினார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.அவர்கள் தங்க ளுடைய மண்மீதும் மக்கள் மீதும் தமது தேசத்தின் மீதும் கொண்ட பற்றுதலால் மட்டுமே இதனைச் சாத்தியப்படுத்தினார்கள்.

இலங்கையின் வடக்குக் கிழக்கில் இருககும்நாங்கள் இத்தகைய விழிப் புணர்வை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே சுரண்டல்களை,நெருக்கடி களை ஏதிர் கொள்ள முடியும். யப்பானியர்கள் முன்பு ஒரு சிறந்த உதாரணமாக இருந்தார்கள்,ஆனால் இன்று ஒரு பலவீனமான உதாரணமாக இருக்கிறார்கள்.

மேலும்,தமிழீழ விடுதலைப்புலி களை உலகம் எப்படிக் கையாள விரும்புகிறது என்பது பற்றியும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் போன்றும் ஜசீர் அரபாத் போலவும் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் மக்களை யும் அன்னியப்படுத்தி விடலாம் என்றே எதிர்பார்க்கின்றது.

இது விடயத்தில்,புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்குவ தில் பின்தளத்தில் இயங்கிய நோர்வே பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும்.அமெரிக்காவின் நலனைப் பேணுவதில் தான் நோர்வே அக் கறை கொண்டுள்ளது.அமெரிக்க உளவு நிறுவனமாகிய சி.ஐ.எயின் ஐரோப்பியப் பிராந்தியத்திற்கான செயலகம் நோர்வேயில்தான் இயங்கி வருகிறது.

எனவே இலங்கை இனப்பிரச் சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு முயற்சியை உலக நாடுகளும் ரணில் விக்கிரமசிங்காவும்கூட்டாக இணைந்து அரசியல் பொறியாக மாற்றி தமி ழீழ விடுதலைப் புலிகளை அழிக் கும் வேலைத்திட்டத்தை சாத்தியப் படுத்த ஆரம்பித்துள்ளன என்று கணேசலிங்கம் மேலும் கூறினார்.

(இ-77)

## தேர்தல் ஆணையாளரின் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயா னந்த திஸநாயக்க தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று பரிசீலனை செய்து, மீள் விசாரணையை எதிர் வரும் 19ம் திகதிக்கு ஒத்திவைத்தது.

தனக்கு 60 வயதாகியும் சேவை யிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அனு மதியை அரசாங்கம் வழங்காமை தமது அடிப்படை உரிமையை மீறு வதாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார்.

அரசியல் சட்டத்தின் 17வது திருத் தச் சட்டத்தின்படி, தேர்தல் ஆணைக் குழுவொன்றை ஜனாதிபதி இதுவரை நியமிக்காதது தமது அடிப்படை உரிமையை மீறி இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தனது மனு வில் குறிப்பிட்டுள்ளார்.

இம் மனு நேற்று உயர் நீதிமன் றத்தில் நீதியரசர்கள் ஷிராணிபண் டாரநாயக்க, பீ. எதுசூரிய, நிஹால் ஜெயசிங்க ஆகியோர் முன்னிலை யில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(இ)

## பொது நலவாய அமைச்சர்கள் பிரதமர் ரணிலுக்குப் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட் டுள்ள பொதுவான பிரச்சினைகளுக் குத் தீர்வு காண்பதற்காக உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை உதவியாகப் பெற்றுக்கொண்ட

ஞான,தொழில்நுட்பத்துறைகளில் பெரும் முன்னேற்றத்தை கண்ட போதிலும் வடக்குக் கிழக்கில் இடம பெற்ற யுத்தம் இத்தகைய முன்னேற் றத்திற்கு தடையாக இருந்துள்ளது.

எனினும் தற்போது அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் ஏற்

## விசேட அதிரடிப்படையினர் பக்தர்களை தாக்கியுள்ளனர்

(மட்டக்களப்பு)

கல்முனையில் இருந்து மண்டூர்

பக்தர்கள் தெரிவித்தனர். எனினும் அதிரடிப்படையினர் பலாத்காரமாக

லிங்கம் தொடர்ந்து கருத்துரையாற்றும் போது,

புரிந்துணர்வு உடன் படிக்கையின உள்நோக்கங்களை பருமட்டாக நோக்கும் போது,ஆபத்து மிக்க தென்ற தமிழர் தரப்பின் எச்சரிக்கை கருதுகோளாக அமைகிறது.புரிந்துணர்வின் பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக்கைகள்,அவரது அரசுக்கும் அவர் சார்ந்த நாட்டுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தினாலும்,தமிழர்களையும்

---

## பொங்குதமிழ்...

களும் நிகழ்வில் கலந்து கொண்டு தமது உணர்வெழுச்சியை வெளிப்படுத்த உற்சாகமாக இருப்பதாக பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

எமது நிலம் எமக்கு வேண்டும். என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 27ம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (இ)


**Physics**
**பிரத்தியேக வகுப்புக்கள்**
**A/L 2005**
Mon.6.30-7.30a.m.
By.S.Sugendran
B.Sc.(sp).Dip in Ed
கொக்குவில் பிரம்படி லேன்


# பொது நலவாய அமைச்சர்கள் பிரதமர் ரணிலுக்குப் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை உதவியாகப் பெற்றுக்கொண்டமைக்கு பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவையும் அரசாங்கத்தையும் பாராட்டியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர்களின் மாநாட்டிலேயே இந்த பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கடந்த இரண்டு தசாப்தங்களாக உலக நாடுகளில் விஞ்ஞான,தொழில்நுட்பத்துறைகளில் பெரும் முன்னேற்றத்தை கண்டபோதிலும் வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் இத்தகைய முன்னேற்றத்திற்கு தடையாக இருந்துள்ளது.

எனினும் தற்போது அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகளின் மூலம் இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும் எனவும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)


**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்
**A/L 2004**
**பொருளியல்!!**
பணம்,வங்கி
BY-சண்
ஆரம்பம்:14.06.2003
சனி 6.30AM


---

## யுத்த...

வரிடம் சுட்டிக்காட்டியுள்ளேன். சட்ட மூலங்களில் உள்ள பலவீனங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள கடற்பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்களை கடற்படையினர் தடுத்து நிறுத்தும் போது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளோம்.

சமாதான சூழ்நிலை ஏற்படுத்துவதிலேயே நாம் கண்ணும் கருத்துமாக உள்ளோம். இந்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னேற்றகரமாக முன்னெடுத்துச் செல்லும் போதே பெருமளவு உதவிகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பே எமது குறிக்கோள் ஆகும். அத்துடன் எதிர்காலத்தில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமாகும். அதிகாரமற்ற நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந் நிலையில் டோக்கியோ மாநாட்டு தீர்மானங்கள் தொடர்பாக இப்போது எதுவும் உறுதியாகக் கூற முடியாது. இதில் எமக்கு அதிகளவு ஐயப்பாடுகள் எழுந்துள்ளன. இதனை நாம் பொறுத்திருந்தே பாரக்க வேண்டும் என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

மதியை அரசாங்கம் வழங்காமை தமது அடிப்படை உரிமையை மீறுவதாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார்.

டாரநாயக்க, பீ. எதுசூரிய, நிஹால் ஜெயசிங்க ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (இ)

# விசேட அதிரடிப்படையினர் பக்தர்களை தாக்கியுள்ளனர்

(மட்டக்களப்பு)

கல்முனையில் இருந்து மண்டூர் கண்ணகை அம்மன் கோயிலுக்கு சென்ற பக்தர்கள் மட்டக்களப்பு விசேட அதிரடிப்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9மணிக்கு கல்முனை கம்பிக்கட்டுப் பாலத்தில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

உழவு இயந்திரம் ஒன்றில் கல்முனையில் இருந்து மண்டூருக்குச் சென்ற 19 பக்தர்களை கம்பிக்கட்டு பாலத்தில் வழிமறித்த விசேட அதிரடிப் படையினர் உழவு இயந்திரத்தில் தமக்கு மண் ஏற்றித் தருமாறு பணித்துள்ளனர்.

தாம் கோயிலுக்குச் செல்வதாகவும் இதனால் மண் ஏற்ற முடியாதெனவும் அதில் பிரயாணம் செய்த பக்தர்கள் தெரிவித்தனர். எனினும் அதிரடிப்படையினர் பலாத்காரமாக வற்புறுத்தியதை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, பின்னர் விசேட அதிரடிப் படையினர் அவர்களைக். கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இச் சம்பவத்தின் போது அதில் பிரயாணம் செய்த 7 பேர் கடும் காயங்களுக்கும் ஏனையோர் சிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு விசேட அதிரடிப்படை அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.(இ-14)

## வேலணை பிரதேச சபை
## மீள் கேள்வி அறிவித்தல்- 2003
## திருத்தம்

கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்கப்படமாட்டாது.) நிரலில் வங்களாவடி வீதி, நயினாதீவுக்குரிய மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் 445/= என மாற்றி வாசிக்கவும்.

**தகுதிகள் - 2ம் பந்தி**

இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (இ.தே.ஒ.ச) உறுப்பினராக அல்லது எமது சபையில் பதிவு செய்யப்பட்டோரும், கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம், சமுர்த்தி அமைப்பு கேள்வி கோரலாம்.

**செல்லப்பா சண்முகராஜா(ஜே.பி)**
செயலாளர், வேலணை பிரதேச சபை,
வேலணை

என திருத்தி வாசிக்கவும்.

(C/6282)


**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.